உ

# அருள் ஒளி



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

124

தெல்லிப்பழை, இலங்கை

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் இலக்கியகலாநிதி
# அமரர் மு. கந்தையா அவர்களின்
# ஜனன நூற்றாண்டு



பண்டிதர் திரு. மு. கந்தையா பீ.ஏ. அவர்கள் மும்மொழி வல்லவர், அவர் பொழுது தவப்பொழுது அவர் வாழ்க்கை சமய வாழ்க்கை. அவருடைய அறிவுச் செல்வம் பயன்மரம் உள்ளூர் பழுத்தாற்று; பல இடங்களில் சித்தாந்த வகுப்பும், புராண வகுப்பும் நடாத்தி பெருமை பெற்றவர். இவ்வாறாயதோர் ஊருணியைக் காண்டல் அரிது! அரிது!

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

## ( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

வைகாசி மாத மலர்
2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3

# திருமணச் சடங்குகளில் அதிகரித்துவரும் மேலைத்தேய பண்பாடுகள்

சைவத்தமிழர்களின் பாரம்பரிய பண்பாடுகளை சைவத் தமிழர்கள் தான் பாதுகாக்கவேண்டும். பல நூற்றாண்டுகாலமாக எமது மூதாதையர்கள் பாதுகாத்த உன்னத பண்பாடுகளை சமீபகாலமாக நாம் தொலைத்து வருவது வேதனைக்குரிய விடயமாகும். திருமண வைபவங்களில் மணமகன் மணமகளின் ஆடை அலங்காரம் அனைத்தும் இன்று எம்பண்பாட்டுக்கு மாறாக நாகரீகத்தின் பெயரால் சீரழிந்து வருகிறது. இவ்விடயத்தில் நாம் அனைவரும் அக்கறை கொள்ளவேண்டும். பௌத்த மதத்தவர்கள், இஸ்லாமியர்கள், கிறீஸ்தவர்கள் தங்கள் திருமண வைபவ பாரம்பரிய கலா சாரங்களை இன்றும் மிகக் கவனமாகப் பேணி வருகிறார்கள். என்று மில்லாதவாறு எமது திருமண வைபவங்களில் பாரம்பரிய அணிகலன்கள் முதல் நீக்கப்பட்டு வேடிக்கையான உடைப் பண்பாடு மிளிர்வதைக் காணலாம். பாகிஸ்தான், ஆந்திரா பண்பாட்டுடைகளை மணமகன் அணிவதும் பெண்களின் ஆடைக் கலாசாரத்திலும் வேற்று நாகரிகங்களை அலங்கார ஒப்பனையாளர் மேற்கொள்வதும் இன்று வழமையாகிவிட்டது. மணமக்களின் ஆடை அணிகலன்கள் மட்டுமல்ல, மணவிழாவுக்கு வரும் உறவினர்களின் பண்பாட்டு உடைகளும் எம் பாரம்பரிய பண்பாட்டுக்கு மாறாக மாற்றமடைந்து வருகிறது. “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்” என்று சொல்லி நாம் இவ்விடயங்களில் அலட்சியமாக இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் பல இடையூறுகளை உருவாக்கும் என்பது உண்மை.

திருமணச் சடங்கில் பரிமாறும் பாரம்பரிய பண்பாட்டு உணவு வகைகளும் மறைந்து புதியவகை சிற்றுண்டிகள் வழங்கும் மரபு ஏற்பட்டு வருகிறது. இதனால் எமது தலைமுறை எமது பாரம்பரிய பலகாரங்களை அறியாதவர்களாக மாறுகிறார்கள். திருமணச் சடங்குகளில் புரோகிதர்களாகக் கடமையாற்றும் சிவாச்சாரியார்கள் கிரிகைகளில் மிகுந்த அக்கறை செலுத்தவேண்டும். தற்போது அக்கிரிகைளில் கூடச் சில இடங்களில் வழமைக்கு மாறான விடயங்களைப் புகுத்துவதைக் காணலாம். திருமணச் சடங்கில் சைவப் பாரம்பரிய நெறிமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். முக்கிய கிரிகைகளை புரோகிதர்கள் விளக்கம் சொல்லி நிறைவேற்றுதல் பயனாக இருக்கும். அன்பர்கள் அனைவரும் இவ்விடயங்களில் பற்றுறுதியுடன் செயற்பட்டு பாரம்பரிய பண்பாடு நிலைத்திட ஆவன செய்வோமாக.

– ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாதசித்தர்

ஏழாலை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்

சொல்லரிய சித்தர்குழாம் நிறைகொல்லிச் சிகரமதிற்
சுருதிமுடி வானஒளி வெளியை நாடி
அல்லறுத் தானந்தப் பேரமுதம் அநுதினமும்
அருந்தியடி பணிந்தவரை அப்பாற் போற்றி
வெல்லரிய சித்திகளோ ரெட்டினையும் சிறுமகவு
போலியற்றிப் பித்தரைப்போல் வெளிவந் திந்நாள்
மல்லல்வளம் கரிகாலி நாகன்மனைக் கான்முனைகள்
வழுத்துநாவ நாதனடி வணக்கஞ் செய்வாம்.

நாவலப்பிட்டிப் பட்டினத்திலிருந்து நுவரெலியா செல்லும் கொத்மலை வீதியில் பதின்மூன்றாவது மைல் தூரத்திலுள்ள குயின்ஸ்பரி என்ற தேயிலைத் தோட்டம். அத்தோட்டத்தில் கரிகாலியிலிருந்து வந்து குடியேறிய நாகன் குடும்பத்தினர் பெரிய பெருமாள் அம்மையார். இந்த அம்மையார் அடியார் பக்தியிற் சிறந்தவர். வீட்டிற்கு வரும் அடியார்கள் அனைவரையும் சிவமாகவே பாவிப்பவர். பெருமாள் அம்மையர் அடியார் பக்தியிற் சிறந்து விளங்கியதோடு நிர்வாகத் திறமையிலும் வல்லவர். அம்மையர் வருடத்தில் பாதி நாட்கள் கரிகாலியிலும் பாதி நாட்கள் குயீன்ஸ் பரியிலும் காலம் கழித்து வந்தார்.

கொல்லிமலை தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர்த் தாலுக்காக்களில் உள்ள குன்றுத் தொடர். இதற்குக் கொல்லி அறப்பள்ளி என்ற பெயரும் உண்டு. அம்மலை உச்சியில் உயிர்களுக்கு ஆன்ம ஞானமாகிய அஹிம்சா தர்மத்தை அருள்செய்து அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானவல்லியும், அறக்கடவுளும் விளங்கும் அறப்பள்ளிநாதர் சந்நிதி ஒன்று விளங்குகிறது. அறப்பள்ளிநாதர் சந்நிதானத்திற்கு ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் சென்று அம்மையாரின் திருவருட் பொலிவைக் கண்டு அம்மையார் சந்நிதிமுன் முருகக் கடவுளை ஸ்தாபித்திருக்கின்றனர். அம்மலையில் பல பெரிய குகைகள் இருக்கின்றன. அவற்றில் பல சித்தர் குழாங்கள் வசிக்கின்றன.

இவர்களில் ஒருவரே நவநாதசித்தர் என்ற பெயருடையவர். நீண்டகாலத் தவத்தினால் சித்தி பெற்றவர். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளித்தவர். கொல்லிமலைச் சித்தர்களுள் மிகச் சிறந்தவராகப் போற்றப்பட்டவர். அயல் கிராமங்களிலுள்ள மக்கள் இவரை மானம்பாக்கி சுவாமிகள் என அழைத்து வந்தார்கள். சுவாமிகள் குகையில் மோனத்தவம் புரிந்த காலங்களில் பசித்தால் அடி வாரத்திலுள்ள கிராமங்களுக்கு வருவார்கள். அத்தகைய கிராமங்களில் கரிகாலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று. பெருமாள் அம்மையாரின் அடியார் பக்தியால் கவரப்பட்டு நவநாதசித்தர் அடிக்கடி அம்மையாரிடம் வந்து உணவு பெற்றுச் செல்வார். சித்தர் அம்மையாரைச் செல்லமாக “ஆயா” என்று அழைப்பார். கௌபீன உடையோடு மலையிலிருந்து வரும் சித்தர் நேராக அம்மையாரின் வீட்டு முற்றத்திற்குச் சென்று “ஆயா” என்று குரல் கொடுப்பார். அம்மையார் எங்கிருந்தாலும் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் ஓடோடியும் வந்து சுவாமிகளுடைய திருப்பாதங்களை விளக்கி பூப்போட்டு வணங்கிய பின் தயாராக இருக்கும் உணவினைக் கொண்டுவந்து இருகைகளையும் ஏந்தி நிற்கும் சுவாமிகளின் கைகளில் இடுவார்கள். சுவாமிகள் நின்ற நிலையிலேயே உணவை உண்டு கையில் நீரூற்ற அதனையும் வாங்கி அருந்தியவுடன் தவத்தை நோக்கிச் சென்று விடுவார்கள்.

அம்மையார் ஒருநாள் சுவாமிகளுக்கு உணவு ஊட்டும்போது “சுவாமி சிலோனில் நாங்கள் ஒரு சுப்பிரமணியர் கோயில் கட்டுகின்றோம். கெதியில் கும்பாபிஷேகம் நடத்த இருக்கின்றோம். சுவாமிகள் தவறாது அதற்கு வரவேண்டும்” என்று மனம் உருகிக் கேட்டார்கள். சுவாமிகள் புன்முறுவல் பூத்தவராய், “ஆயா நினைச்சா அடிமை வரும்” என்று கூறினார்கள். அம்மையார் குயீன்ஸ்வரி வந்து மாதக்கணக்காகிவிட்டன. கோயில் கட்டும் வேலை முடிவடைந்து கும்பாபிஷேகத்திற்கான நாளும் குறித்தாகிவிட்டது. கும்பாபிஷேகத்திற்கான ஆயத்தங்கள் எல்லாம் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

## நவநாத சித்தர் குயீன்ஸ்பரி வருகை

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் தான் அம்மையார், தான் சுவாமிகளுக்குச் சொன்னவற்றை நினைவுகூர்ந்தார். மூத்தமகனை அழைத்துத் தான் சுவாமிகளிடம் கூறியதையும், சுவாமிகள் அதற்குக் கொடுத்த விடையையுங் கூறிச் சுவாமிக்கு ஒரு கடிதம் எழுதுமாறு பணித்தார். ”இன்று தந்தி அடித்தாலும் சுவாமிகள் வந்துசேர வாரம் ஒன்றாகும். நாளைக்குத்தான் கும்பாபிஷேகம் முடிந்துவிடுமே.இன்று சுவாமிக்கு அறிவித்து என்ன பயன்? என்ற மகனார் நினைவுக்கு வந்த உடனே அறிவிக்க வேண்டியது எங்கள் கடமை என்றார் அம்மையார். அன்றே தபால் எழுதித் தபாற் கந்தோரில் சேர்க்கப்பட்டது. தனது கடமை ஒன்று நிறைவேறிவிட்டதாக அம்மையாரின் மனதில் ஒரு நிறைவு. சுவாமிகளின் அருட்சக்தியை நன்கு உணர்ந்தவராகையினால் சுவாமிகள் வரக்கூடும் என்றொரு நம்பிக்கை.

மறுநாள் அதிகாலை, வீட்டிலிருந்து கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய பொருட்களுடன் கோயிலுக்கு வந்தார் அம்மையார். அந்த நேரம் சுவாமிகள் எதிரேவந்து கொண்டிருந்தார். அம்மையாருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஓடிச்சென்று சுவாமிகளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்பம் சொரிந்தார். சுவாமிகளும் அம்மையாரைத் தழுவி எடுத்துக் கொண்டார். “சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைக்குத்தானே கடிதம் எழுதினேன். எப்படிச் சுவாமி வந்தீர்கள்?" என்று அதிசயம் மிகக் கேட்டார் அம்மையார். "ஆயா நினைச்சுது அடிமை வந்திட்டுது" என்று சுவாமிகள் கூறினார்கள்.

கோயிலுக்கு முன்னாக வலது பக்கத்தில் கோணத்திசையாக உள்ள ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி "ஆயா இந்த இடத்தில் தான் அடிமைச் சமாதி வைக்க வேண்டும்" எனச் சுவாமிகள் கூறினார்கள். அதைப்பற்றி எல்லாம் எதற்காக சுவாமிகள் இப்பொழுதே கூறிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று செல்லமாகக் கடிந்தார் அம்மையார்.

நாட்கள் சில உருண்டோடின. குயீன்ஸ்பரிக்கு வந்திருக்கும் சாமியாரைப் பற்றித்தான் மலையகமெங்கும் பேச்சு அடிபட்டது. மலையகத்திலுள்ள ஆயிரக்கணக்கான தோட்டங்களிலிருந்தும் பக்தர்கள் சுவாமிகளைத் தரிசிக்க வந்தனர். குயீன்ஸ்பரி ஒரு யாத்திரைத் தலமாக விளங்கியது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் உயர்ந்த உத்தியோகத்தர்கள், ஆன்மீகவாதிகள் வந்து சென்றனர். சுவாமிகளைத் தரிசிக்க இந்தியாவிலிருந்தே பக்தர்கள் வந்தனர். இந்தியாவிலிருந்து வந்தவர்கள் சுவாமிகளைத் தரிசித்தவுடன் இவர் அந்த ஊரில் சமாதியானவர். இந்த ஊரில் சமாதியானவர் என்று பேசத் தலைப்பட்டனர். சுவாமிகளைத் தரிசிக்க வந்த சேலம்வாசி ஒருவர் ஒரு வருடத்திற்கு முன்புதான் இச்சுவாமியைத் தாங்கள் சேலம் பக்கத்தில் சமாதி செய்ததாகத் தெரிவித்தார். அதனைச் சுவாமிகளிடம் விசாரித்தபோது சுவாமிகள் புன்சிரிப்புடன் "இருக்கும் அப்பா" என்றார்.

**நவநாதசித்தரின் சித்துக்கள்**

சித்தர்களுக்கு அவர்கள் செயல் எல்லாம் இயற்கை. சாமானியராகிய எங்களுக்கு அவைகள் அற்புதங்கள். தோட்டத்தொழிலாளருடன் சுவாமிகள் சகசமாகப் பழகினார். தொழிலாளரும் சுவாமிகள் மேல் அன்பும், மரியாதையும் உடையவராகப் பழகினார். பக்கத்தில் உள்ள தோட்டங்கள் தோறும் சுவாமிகள் தாமாகவே உலாவிவருவார். குயீன்ஸ்பரி தோட்டத் தொழிலாளரிடையே சுவாமிகள் பல சித்துக்கள் விளையாடினார்கள்.

ஒருநாள் சுவாமிகள் பக்கத்துத் தோட்டத்தில் உள்ள கங்காணியார் ஒருவரைச் சந்திக்கத் தனிமையில் சென்று கொண்டிருந்தார்கள். தேயிலைச் செடி மறைவில் கஞ்சாப்புகை குடிப்பதற்காக மூவர் மறைந்திருந்தனர். சுவாமியைக் கண்டதும் சுவாமி! கஞ்சாப்புகை குடித்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று வற்புறுத்தினர். சுவாமிகள் மறுத்தார். அவர்கள் விடவில்லை. சுவாமியும் இணங்கினார். நச்சுத் தன்மையுள்ள சுவாமிகள்தான் குடிக்க வேண்டும் எனக் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி மறுத்து, "நீங்களே முதலில் குடியுங்கள். நீங்கள் குடித்து முடிந்தபின் நான் கடைசியாகக் குடிக்கின்றேன்" என்றார். அவர்கள் சுவாமிகளை விடவில்லை; வற்புறுத்தினார்கள். சுவாமிகள் ஒரு முறை புகையை இழுத்து முன்னாக ஊதினார். மூவர் முகத்திலும் புகைபிடித்த உடனே மயங்கி வீழ்ந்தனர். சுவாமிகள் தாம் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றுவிட்டார்கள். புகை குடித்த மூவரையுந்தேடி அந்தந்த வீட்டில் உள்ளவர்கள் தோட்டம் முழுவதும் அலைந்தனர்.

ஈற்றில் மூவரும் மயங்கிய நிலையில் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கும் தெளிவு ஏற்படாமையால் கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுவாமிகளுடன் இவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டார்கள் என்ற செய்தி எப்படியோ தெரிந்துவிட்டது. தொழிலாளர் மூவரினதும் உற்றார், உறவினர், சுவாமிகள் இருந்த இடஞ்சென்று பிழையை மன்னிக்குமாறு கண்ணீர்வர வேண்டினர். சுவாமிகள் தமக்கும் அதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென அனுப்பிவிட்டார். நான்கு, ஐந்து நாட்களாகியும் அவர்கள் மயக்கம் தெளியவில்லை. சுவாமிகளிடம் மீண்டும் சென்று உயிர்ப்பிச்சை இடுமாறு மன்றாடினார்கள். சுவாமிகள் ஒரு சிகரெற் வாங்கிப் பற்றவைத்து ஒரு முறை புகையை இழுத்து ஊதினார். புகை சுழன்று சுழன்று சென்றது. நீங்கள் கவலையில்லாமல் செல்லுங்கள், நோய் சுகமாய்விடும் என்று வந்தவர்களை அனுப்பினார். சுவாமி சிகரெற் புகையை இழுத்து வெளியே ஊதிய அதே நேரத்தில் மூவரும் மயக்கம் தெளிந்து எழுந்தனர்.

இச்செய்தி நிகழ்ந்த பின் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே சுவாமி மீது பெருமதிப்பும், பயபக்தியும் ஏற்பட்டன. சுவாமிகளைத் தரிசிப்பதற்காக எங்கிருந்து பக்தர்கள் வந்தாலும் தங்குமிட வசதி, சாப்பாட்டு வசதி யாவும் கங்காணியார் குடும்பத்தினர், அன்போது மனப்பூர்வமாகச் செய்து ஆதரித்து வந்தனர். சுவாமிகளுடைய வருகைக்குப் பின்னர் கங்காணியார் வீடு ஓர் அன்னசத்திரமாக மாறியதென்றே சொல்லவேண்டும்.

ஒருநாள் பெருமாள் அம்மையார் சிதம்பரம் செல்லவேண்டுமென்று சுவாமிகளிடம் உத்தரவு கேட்டார். சுவாமிகள் ஆசியுடன் அனுப்பி வைத்தார்கள். அம்மையார் சிதம்பரம் சென்று ஞானப்பிரகாலத்தில் தீர்த்தம் ஆடி ஜெபம் செய்வதற்காகச் சுவாமிகளால் கொடுக்கப்பெற்ற உருத்திராக்க மாலையைத் தேடினார். காணவில்லை. வீட்டில் மறந்துபோய் வைத்துவிட்டு வந்துவிட்டார். கண்கள் மூடியபடி கைகள் கூப்பிய வண்ணம் நவநாதசித்தரை நினைத்து உருகினார். உருத்திராக்கமாலை கைகளில் விழுந்திருக்கக் கண்டார். நவநாதப் பெருமாள் புறம் புறந் திரிந்து கருணை பாலிப்பதை உணர்ந்து அம்மையார் உள்ளம் நெக்குருகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளுடைய மிக நெருங்கிய பக்தர்களுள் திருக்கடம்பத்துறை அன்பர் சி.குருசாமியும் ஒருவர். குருசாமி அவர்களுக்குச் சுவாமிகளுடைய தொடர்பு ஏற்பட்டதன் பின்பு கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்கவேண்டும் என்றொரு ஆசை எழுந்தது. அந்த ஆசையைச் சுவாமிகளிடம் கூறினார். அமாவாசைத் தினத்தன்று ஒருநாள் இரவு 2 மணிக்குக் கொல்லிமலை வருமாறு சுவாமிகள் குருசுவாமியை அழைத்தார்கள். இந்த அமாவாசை இருட்டில் எப்படிச் சொல்வதென்று குருசுவாமி தயங்கினாராயினும் சுவாமிகள் மீது கொண்ட நம்பிக்கையில் சுவாமியைப் பின் தொடர்ந்தார். குருசாமியின் தயக்கத்தை உணர்ந்த சுவாமிகள் குருசாமியின் வலது கையைத் தமது இடது கையால் பற்றிக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொள்ளும்படியும், திறக்கச் சொல்லும்போது திறக்க வேண்டும் என்றும் அருளினார். 2, 3 நிமிடங்களுக்குள் கண்களைத் திறக்கச் சொன்னார். சுவாமி குருசுவாமி கண்களைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! கொல்லிமலை உச்சியில் தாம் இருப்பதை உணர்ந்தார். சுவாமிகள் பெரியதொரு பாறாங்கல்லை இலகுவாகக் கையால் அகற்றி உள்ளே அழைத்துச் சென்றார். ஏழு சித்தர்கள் ஆழ்ந்த சமாதியில் இருப்பதைக் கண்டு தரிசித்தார்.

சித்தர் ஊரைக்கரை, கோம்பை முதலிய இடங்களில் பக்தர்களின் வழிபாட்டுக்காளானார். அங்குள்ள மக்கள் அபிஷேகாதிகள் செய்தே சித்தரை உபசரித்தார்கள். ஆலயத்துடையான்பட்டி இராமசாமி செட்டியார் திருப்பணி செய்துள்ள பெருமாள் கோயில் கிணற்றில் அதிக ஆழத்திற்கு வெட்டியும் நீரின்மையைச் சித்தரிடம் தெரிவிக்க சித்தர் ஒரு சக்கரத்தை தகட்டில் வரைந்து கிணற்றில் இடச் செய்தார். இவ்வாறே இராமசாமி செட்டியார் செய்ய கிணற்றில் நிரம்ப நீர் ஊறி வந்தமையை செட்டியார் ஒரு விழாவாகக் கொண்டாடினார். சுவாமிகளை வைத்துக் கொண்டே கும்பாபிஷேகத்தை வெகுவிமரிசையாக நடத்தினார்.

பச்சைப் பெருமாள் பட்டியில் ஒரு செட்டியார். புறத்திண்ணையில் சித்தர் இமையா நாட்டத்தோடு யோகத்தில் இருந்தார். செட்டியாருக்குச் சுவாமிகளைக் கண்டால் பிடிக்காது. எல்லோரும் வெளிவேடம் போடுகிறவர்கள் என்பது அவரது எண்ணம். ஒரு உண்மை மகானை உண்மை மகானால்தான் புரிந்துகொள்ள முடியும்.

"புறத்திண்ணையிலே ஒருத்தர் செத்த ஆடு விழிப்பது போல் விழித்து வேஷம் போடுகிறார்" என்று செட்டியார் வீட்டிலுள்ளோருக்கும், போவோர் எல்லோருக்கும் பரிகாசமாகக் கூறினார். அவருடைய பரிகாசம் பேச்சளவில் நின்றுவிடவில்லை. செயலிலும் இறங்கியது. சித்தருடைய தலையில் ஒரு கொள்ளிக்கட்டையைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து வைத்தார். சித்தர் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது உணர்வுவரப் பெறாதவராக இருந்தார். இதனை உணர்ந்த மற்றொரு செட்டியார் சிரத்திலிருந்த கொள்ளிக்கட்டையை அக்றறி சித்தரை வணங்கி நின்றார். சித்தர் விழித்தார். எதிரே நின்றவரைப் பார்த்து "என்னப்பா" என்றார். சுவாமி இந்த வீட்டு செட்டியார், தங்கள் தலையில் நெருப்பிட்டார். அதனை அடியேன் அகற்றினேன்" என்றார். "அப்படியா? அவர் மிக நல்லவர்" என்று சித்தர் அகன்றார். அக் குடும்பமே இருந்த இடம் தெரியாது அழிந்து போனதை யாவரும் அறிவர்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை
## வைகாசி மூலம் - 10-06-2017




**"பூழியர்கோன் வெப்பொழித்த**
**புகலியர்கோன் கழல் போற்றி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகம்

**சிற்பி**

அது ஒரு பிள்ளையார் கோயில். கேட்டவரம் அருளும் கீர்த்தியுள்ள பிள்ளையார் – சித்திவிநாயகர் கோலாகலமாக வீற்றிருக்கின்றார்.

காலைப் பூசை நடைபெறப்போகிற நேரம். குளித்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து, பயபக்தியுடன் அங்கே வந்தான் குமரையன்.

கடந்த இரண்டு நாட்களாக அவனுக்கு ஒரு பெருங்கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

வானம் மூட்டங் கட்டியிருந்தது; கரு மேகங்கள் ஒன்று திரண்டு நெருக்கியடித்துக் கொண்டிருந்தன. "இன்னுஞ் சில மணி நேரத்தில் இறங்கி வருவோம்; நாடு முழுவதையும் வெள்ளக் காடாக்கி விடுவோம்" என்ற எச்சரிக்கை இடியோசையாக ஒலித்தது.

பல ஆண்டுகளின் பின்இந்த முறை தான் குமரையனுடைய உப்புப் பாத்திகள் நன்கு விளைந்திருந்தன. இன்னும் நாலைந்து நாட்களுக்கு வெய்யில் உக்கிரமாக எறித்தாற் போதும். உப்பைக் கிளறி அள்ளிச் சேகரித்துக் கடைக்காரர்களுக்குக் கொடுத்துவிடுவான். இது காலவரை அவன் பட்ட கடன் எல்லாம் தீர்ந்துவிடும்; கையிலும் தாராளமான பணம் மிஞ்சும்; அவனுடைய ஆசைக் கனவுகள் எல்லாம் நிறைவேறும்.

ஆனால், அதற்குள் மழை பெய்துவிட்டால்....?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைத் தடுத்து விடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்; உங்கள் மனம் குளிர உங்களுக்குப் பாலாலும், தேனாலும் பன்னீராலும் அபிஷேகம் செய்விப்பேன்" – அழுது தொழுது கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தான் குமரையன்.

சற்று நேரத்தில், அங்கே வந்து சேர்ந்தான் முருகையன். அதே பக்திக் கோலத்தில் – குளித்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்துக் கொண்டு பயபக்தியுடன் வந்தான்.

அவனிடமும் ஒரு பெருங்கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

கோர வெய்யிலால் அவனுடைய நெல்வயல்கள் வரண்டுவிட்டன. பயிர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிச் சேர்ந்துவிட்டன. எப்போதோ பெய்திருக்கவேண்டிய மழை இதுவரை அவனை ஏமாற்றியே விட்டது. இரண்டு மூன்று தடவை வானம் இருண்டு மழைக்கோலம் காட்டியது உண்மை தான்; அவனும் மனம் மகிழ்ந்தது உண்மைதான்; ஆனால் அதெல்லாம் பொய்த்துவிட்டது.

இப்போதாவது மழை பெய்தாற்போதும். அவனுடைய பயிர்கள் செழிக்கும்; நெல்மணியாய்க் கொழிக்கும்; அவனுடைய இருண்ட வாழ்வுக்கு விடிவு ஏற்படும்.

ஆனால், இம்முறையும் மழை பொய்த்துவிட்டால்...?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைக் கொடுத்துவிடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள். உங்களுக்குப் பாலாலும் தேனாலும் பன்னீராலும் அபிஷேகம் செய்விப்பேன்" – அழுது தொழுது கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தான் முருகையன்.

உள்ளே மூலஸ்தான விக்கிரகத்துக்குத் தீபாராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சர்வாலங்கார மூர்த்தியின் அழகு கண்களைப் பறிக்க, இருவரும் மானசீகமாகத் தத்தம் வேண்டுதல்களைச் சமர்ப்பித்துக் கொண்டும், நேர்த்திக்கடனை நினைவூட்டிக் கொண்டும் பயபக்தியுடன் நின்றனர்.

பூசை முடிந்து, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு கோவிலைவிட்டு வெளியேற முன், மீண்டும் ஒரு தடவை விநாயகரைப் பார்த்தனர்.

ஆழக்கடலின் அமைதியுடன் அனைத்தையும் அறிந்து கொண்டுள்ள நிறைவுடன், அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் ஆடாமல் அசையாமல், அழகொழுக வீற்றிருந்தார் ஆனைமுகன்.

இருவரும் கோயிலிலிருந்து புறப்பட்டனர்; வானத்தைப் பார்த்தனர்.

வானம் சற்று வெளித்தாற் போல் காட்சியளித்தது.

முருகையனை ஒரு வெறிப் பார்வை பார்த்தான் குமரையன். சிந்தனையில் ஆழ்ந்தபடி தலையைக் குனிந்து கொண்டான் முருகையன்.

தொடர்ந்து அவர்கள் நடந்து கொண்டிருந்தனர்; அடிக்கடி வானத்தைப் பார்த்தனர்; தம் குலதெய்வமான அந்தச் சித்திவிநாயகரை மானசீகமாக வேண்டிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் ஒரு கோடியில் குமரையனின் உப்புப் பாத்திகளும், மறுகோடியில் முருகையனின் நெல்வயல்களும் இருந்தபோதிலும் இருவரின் வீடுகளும் ஊரின் நடுமத்தியில், அருகருகே இருந்தன. இருவரும் எதிரிகள் அல்லர் என்றாலும், அவர்களை நண்பர்கள் என்றும் சொல்லமுடியாது. அவர்கள் ஈடுபட்டிருந்த தொழில்களின் தன்மையால், இருவரிடமும் ஒருவித வேற்றுமையுணர்வு காணப்பட்டது என்பதுதான் சரி.

வீடு கிட்டிவிட்டது.

குமரையன் நடையில் ஒரு மிடுக்கு; வேகம். முருகையனின் நடையில் ஒரு சோர்வு; தயக்கம்.

தத்தம் வீடுகளுக்குள் நுழைவதற்குமுன் மீண்டும் ஒரு தடவை வானத்தை அண்ணாந்து பார்த்தனர்.

வானம் மீண்டும் இருண்டுவிட்டது. கலைந்திருந்த கருமேகங்கள் ஒன்று சேர்ந்துவிட்டனர். இப்பொழுது இடியில்லை; மின்னலுமில்லை. ஆனால் வானத்தில் பொத்தல் ஏற்பட்டதைப் போல் மழை சோனாவாரியாகப் பொழியத் தொடங்கிவிட்டது.

திகைத்துவிட்டனர் இருவரும். திடீரென்று எப்படி ஏற்பட்டது இந்த மாமற்றம்?

ஊழிப்பெருவெள்ளம் வந்துவிடுமோ என்று பயப்படுமளவுக்கு அன்றைய பகற்போது முழுவதும் ஓயாமற் கொட்டிக் கொண்டிருந்த மழை, நன்கு இருட்டியதுதான் ஓய்ந்தது.

குமரையனிடமிருந்து நம்பிகைகயெல்லாம் போய், ஏமாற்றமும் விரக்தியும் எரிச்சலுமே மிஞ்சின.

இத்தனை காலமும் அந்தச் சித்திவிநாயகரை வழிபட்டுத் தான் என்ன பயன்? ஏன், அன்று காலையிற்கூட அதே விநாயகரை அவன் மனமுருகி, மெய்யுருகி வேண்டவில்லையா?

கடவுளா அவர்?

இல்லை கல், வெறுங்கல்.

கண்ணோ கருணையோ அற்ற அந்தக் கருங்கல்லை நெஞ்சார, நாவாரத் திட்டிக் கொண்டிருந்தான் முருகையன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையனின் ஏக்கம் நீங்கியபாடில்லை. மழை வேண்டும் என்று தவங்கிடந்ததும், விநாயகரை வேண்டியதும் உண்மைதான். அளவாக மழை பெய்தாற்றான் அவனுக்கு நன்மை. அதிகப்படி பெய்தால் பயிர் அழுகி நாசமாகிவிடும். மழை இருட்டானபடியால் வயற்பக்கஞ் சென்று பார்த்து வரவும் முடியவில்லை. கலையாத கவலையுடன் வீட்டிற்குள்ளேயே குடங்கிக்கொண்டு கிடந்தான்.

விடிந்தது, வானமும் நன்கு வெளித்துவிட்டது.

உப்புப் பாத்திகளை எட்டியும் பார்க்கவில்லை குமரையன். போய்ப் பார்த்தாற்றான் நிலைமை தெரியுமா?

முருகையன் வயற்பக்கம் ஓடோடியும் சென்றான். நல்ல காலம் வாடிக்கிடந்த பயிரெல்லாம் இப்போது செழித்துச் சிலிர்த்துத் தலையை நிமிர்த்தி நின்றன. சற்று மேட்டுப்பாங்கான அவனுடைய வயலில் அளவான நீர்தான் நின்றது. அவ்வளவும் போதும். இம்முறை அவனுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.

குமரையனின் நெஞ்சு புகைந்து கொண்டிருக்க, முருகையன் தினமும் வயற்பக்கம் சென்றுவந்தான். நெற்பயிர்கள் பொத்தி தள்ளியதை, வெள்ளம் சிறிது சிறிதாக வற்ற நெல்மணிகள் மெல்ல மெல்ல முற்றிக்கொண்டு வருவதைப் பெருமையுடனும் அவதானித்துக் கொண்டுவந்தான் அவன்.

ஆயிற்று, அறுவடையும் முடிந்துவிட்டது. முருகையன் எதிர்பார்த்ததைவிடப் பலமடங்கு அதிக விளைச்சல் கிடைத்தது. வேண்டிக்கொண்டபடி விநாயகர் மனம் குளிர அபிஷேகம் செய்வித்தான்; ஏழைகளுக்கு அன்னதானமும் செய்தான்.

அடுத்த விதைப்புக்கும், ஆண்டு முழுவதும் தன் குடும்பத்துக்குப் போதுமான நெல்லை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுவிடுவது அவன் வழக்கம். ஆனால் இந்த முறை மேலதிகமாகவும் சில நெல் மூடைகளை அவன் வைத்திருந்தான்.

நாளிதழ் உதிர்ந்தது. மாதங்கள் கருகின. ஆண்டொன்று வரண்டு உருண்டது.

அடுத்த விதைப்புக் காலமும் வந்துவிட்டது. ஆனால் வானம் வெளிறிக் கிடந்தது. மழையைக் காணவில்லை. எங்கும் வரட்சி; ஒரே வரட்சி. புல் பூண்டுகள் கருகிச் செத்தன. அகோர வெய்யிலில் மனிதர் புழுவாகத் துடித்தனர்.

முருகையால் வயலுக்குள் இறங்கவே முடியவில்லை. நிலமெல்லாம் இறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரம்பாய்ந்து கிடந்தது.

இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் இதே வரட்சி நிலைதான் என்று பேசிக் கொள்ளப்பட்டது.

பசி – பட்டினி – பஞ்சம் – பற்றாக்குறை – மரணம் – இவை பற்றிய பயங்கர நினைவுகள் மக்களை வாட்டி வறுத்தெடுத்தன.

ஆனால் குமரையன் மட்டும் குதூகலமாக இருந்தான். அவனுடைய உப்புப் பாத்திகள் பூத்துக் கிடந்தன. இத்தனை வருட வாழ்க்கையில் இப்படியொரு செழிப்பான விளைச்சலைக் காணவேயில்லை. அவை வெறும் உப்புப் பாத்திகள் அல்ல; உப்பு மலைகள்; பணக் குவியல்கள்.

ஊர் முழுவதும் பஞ்சத்தில் வாடிக், கண்ணீரில் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதைப்பற்றி விசாரிக்கவோ கவலைப்படவோ குமரையனுக்கு நேரமில்லை. உப்பு மலைகளை உடைப்பதிலும் மூட்டைகளாகக் கட்டி வீட்டிற்குள் பத்திரமாக வைப்பதிலும் அவனுடைய பொழுது போய்க்கொண்டிருந்தது.

எந்தச்சக்தியாலும் – எந்தக் கடவுளாலும், அவன் இலட்சாதிபதியாவதை இனித் தடுக்கமுடியாது; தடுக்கவே முடியாது.

அவனுடைய பிரச்சினைகள் எல்லாம் இனித் தீர்ந்துவிடும்; பஞ்சம் அவனைக் கண்டு பறந்தோடிவிடும்; நீண்ட காலமாக அவன் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தபடி ஒரு காரும் அவனுக்குச் சொந்தமாகிவிடும்; அவன் யாருக்குமே பணியாமல் தலைநிமிர்ந்து செல்லலாம்.....

நாட்கள் சுழன்றன. ஆனால் குமரையன் எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை. உப்பு மூட்டைகள் அப்படி அப்படியே கிடந்தன. ஒரு நேரக் கஞ்சிக்கே மக்கள் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கும் போது இவ்வளவு பெருந்தொகையான உப்பைக் கொள்வனவு செய்ய யார் வரப்போகிறார்கள்?

நாளாக நாளாக அவனுடைய நம்பிக்கைக் கோட்டைகள் தகர்ந்து கொண்டே வந்தன; அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்கும் சாப்பிட்டுங்கூட அவன் வைத்திருந்த அரிசி விரைவில் தீர்ந்துவிட்டது. அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்வதென்றே தெரியாத ஏக்கநிலை. இரண்டொரு தடவை பச்சைத் தண்ணீர் மட்டும் வயிற்றை நிறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலுள்ள பலர் முரகையனைத் தேடி வந்தனர். தேவையும் தகுதியும் அறிந்து, சிலருக்குக் கடனாகவும் சிலருக்குத் தானமாகவும் நெல் கொடுத்தான் முரகையன்.

ஆனால் முருகையனிடம் உதவிபெறுவதற்குக் குமரையனின் தன்மானம் விடவில்லை. அதுமட்டுமல்ல, தான் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை என்பதையும் அடிக்கடி வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

பிள்யைார் கோயில் மணி கேட்கும்போதெல்லாம் அவனுடைய ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பும். தானும் தன் குடும்பமும் இங்கே பட்டினியால் செத்துக் கொண்டிருக்க அந்தக் கருங்கல்லின் மேல் பாலையும் தேனையும் ஊற்றி வீணாக்குகிறார்களே!

இந்த நிலையில், மழை பெய்ய வேண்டும் என்பதற்காக அந்த விநாயகருக்கு விசேட அபிஷேகமும் பொங்கலும் நடைபெறப் போவத அறிந்தபோது அவன் எரிமலையானான். அன்னதானத்துக்குத் தேவையான உப்பை அவனிடம் நன்கொடையாக வாங்க வந்தவர்களை வாய்கொண்ட மட்டும் திட்டித் தீர்த்தான்.

"உந்தக் கல்லுக்கு மேலை தண்ணியை ஊத்தினாப்போலை மழை வந்துவிடுமோ? இந்த இருபதாம் நூற்றாண்டிலை இப்படி ஒரு மோட்டுத்தனமான வேலையைச் செய்யிறதைக் கேள்விப்படாமல் மற்ற நாட்டுக்காரர்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பினம்?"

"அவை நினைக்கிறதைப் பற்றி நாங்கள் ஏன் கவலைப்படவேனும்? நாங்கள் எல்லாரும் ஒரே மனதாகக் கடவுளை வேண்டினால் அவர் நிச்சயம் கண் திறப்பார். முந்தி இரண்டு மூன்று தடவை கொடிய வரட்சி வந்தபோது இப்படித்தானே நாங்கள் செய்தம்? மழை பெய்ததுதானே....?"

சரி, சரி எதையாவது போய்ச் செய்து துலையுங்கோ... ஆனால் என்னட்டை மட்டும் எந்தவித மான உதவிக்கும் வரவேண்டாம். எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை".

ஊரிலையுள்ள எல்லாரும் ஒருமனதாக ஒத்துச் செய்யிற காரியம் இது, நீ மட்டும் இப்பிடி எதிர்த்து நிக்கிறது அவ்வளவு நல்லாயில்லை அண்ணை" என்று சொல்லிக்கொண்டு, போதியளவு உப்பைத் தாமாகவே எடுத்துக் கொண்டு விரைந்தார்கள் தண்டல்காரர்கள்.

குமரையனாற் பொறுக்கமுடியவில்லை அவனுடைய உப்பு எக்கேடு கெட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை. ஒரு சதமேனும் வராவிட்டாலும் அவன் கவலைப்படப்போவதில்லை. ஆனால் ஒரு சிறிய உப்புக்கட்டியென்றாலும் அந்தக் கோவிற் காரியத்திற்குப் பயன்படக்கூடாது. அதை அவன் தடுத்தே ஆகவேண்டும்.

தான் கோயிலுக்குச் செல்லப்போவதைச் சொல்வதற்காக மனைவியை அழைத்தபோதுதான் வேறொரு உண்மை அவனுக்குத் தெரியவந்தது. அவனுடைய மனைவியோ மக்களோ அப்போது அங்கில்லை. அவர்களும் கோயிலுக்குத் தான் சென்று விட்டார்களோ?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போலிருந்தது அவனுக்கு.

அவன் புறப்பட்டான். வெறுப்பு, வேதனை, ஆத்திரம், அவமானம், ஏக்கம், ஏமாற்றம் – எல்லாம் கலந்த ஓர் உருவமாக வீறோடும் வெறியோடும் புறப்பட்டுவிட்டான்.

மனத்தின் ஆவேசத்துக்கு ஈடுகொடுக்க அவனுடைய கால்களால் முடியவில்லை. இரண்டு நாட் பட்டினி வேறு, அவனைத் தள்ளாடித் தடுமாறச் செய்தது. என்றாலும் ஒருவித வைராக்கியத்துடன் அவன் கோவிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

கோவிலை அவன் அடைந்தபோது, ஊர் முழுவதும் அங்கே திரண்டு நிற்பது தெரிந்தது. அனைவருமே அந்த விநாயகரை நோக்கிக் கைகூப்பியபடி நின்றனர். பலருடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது.

'கஷ்டப்படுபவர்களுக்குக் கண்ணீரைக் கொடுக்கத்தான் இந்தக் கல்லால் முடியும். வயல்களில் மழையைப் பெய்விக்க முடியுமா?

ஒருவித ஏளனப் பார்வையுடன் அந்த மனிதக் கும்பலை நோக்கினான். முன் வரிசையில் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் பயபக்தியுடன் நின்றனர். மனைவியின் கைகளில் ஏன் ஒரு பாத்திரம்? கோயிற் பிரசாதத்துக்காகவா?

பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு அத்தனை பேருக்கும் மத்தியில் வைத்து அவளுக்கு அடித்தாற்றான் அவனுடைய ஆத்திரம் தீரும் போலிருந்தது.

சிறிதும் தாமதியால் அவள் மேற் பாய்ந்தான். உரத்த குரலில் எதையோ கர்ச்சித்தபடி கையை ஓங்கியவன் அடுத்த கணமே சுருண்டு விழுந்தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குமரையனைத் தூக்குங்க்ள.... முகத்திலை தண்ணீர் தெளியுங்கள். காற்றுப்படும்படி நன்றாக விசிறுங்கள்...” என்ற குரல்கள் எழுந்தது அவனுக்குக் கேட்கவில்லை. அனைவருமே அவனுக்காகப் பரிதாபப்பட்டாலும், பரபரப்படைந்ததும், ஒவ்வொருவரும் அவனுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று துடிதுடித்ததும் அவனுக்குத் தெரியாது.

நீண்ட நேரத்தின்பின் மயக்கம் நீங்கிச் சிறிது சிறிதாக உணர்வு திரும்பியபொழுது, தன் மனைவியின் மடியிற் தான் படுத்திருப்பதையும், கோயிற் பிரசாதத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக முருகையன் ஊட்டிக் கொண்டிருப்பதையும் அவன் உணர்ந்தான்.

“முருகையாண்ணை, இன்டைக்குக் குமரையாண்ணையின்ரை உப்பு மட்டும் வந்திராவிட்டால், உங்களின்ரை அரிசியாலும் அவ்வளவு பிரயோசனம் இருந்திருக்காது” என்று யாரோ சொல்லிக்கொண்டிருந்தது குமரையனுக்குத் தெளிவாகவே கேட்டது.

‘மின்’ வெட்டினாற் போன்றிருந்தது அவனுக்கு.

போன தடவை அவனுடைய வயிற்றெரிச்சலைக் கிளறிக் கொண்டு பெய்த மழையில் விளைந்த அரிசி தானா இன்று அவனுக்கு உயிரளித்துக் கொண்டிருக்கின்றது? அதே அசிரியுடன் தானா அவனுடைய உப்பும் இரண்டறக் கலந்திருக்கிறது?

விக்னேஸ்வரா..... விநாயகா.....”

பேருண்மை ஒன்றைப் புரிந்துகொண்ட பேரானந்தத்தில் குமரையனுடைய வாய் அவனை அறியாமலே கூவியது,

‘அரோகரா பிள்ளையாருக்கரோகரா...’

கூடிநின்ற மக்களும் கூவினர்; கூத்தாடிக் கும்பிட்டனர். வெளியே மழைத்துளிகள் சடசடத்தன.

கடவுள் கண்திறந்துவிட்டார் என்ற நம்பிக்கையில் விநாயகரை நோக்கி அனைவருமே கைகூப்பினர்.

ஆனால் விநாயகர் மட்டும் ஆழக்கடலின் அமைதியுடன் அனைத்தையும் அறிந்து கொண்டுள்ள நிறைவுடன் அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் அழகொழுக அங்கே வீற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தொடர் கட்டுரை – 4

# கோவிலில் வழிபட வாருங்கள்

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

அம்மம்மா விநாயகரின் சந்நிதானத்தை நோக்கி அவரை வழிபடுவதற்காகச் செல்லவும் அம்பிகையும் கணாதிபனும் பின் தொடர்ந்தனர்.

"முதலிலே பிள்ளையாரைத்தான் கும்பிடவேண்டும், இல்லையா அம்மம்மா?"

"எப்பொழுதும் முதலிலே பிள்ளையாரை வணங்கி எதையும் செய்வதுதானே வழக்கம். பூசை செய்யும் போதும் முதலிலே பிள்ளையாருக்குத்தான் பூசை நடக்கும். தடைகள், இடர்கள் ஏற்படாது காப்பவன் விக்னேஸ்வரன். விக்கினம் என்றால் இடையூறு. அவற்றை அகற்றும் ஈஸ்வரன் விக்னேஸ்வரன்" என அம்மம்மாவை முந்திக்கொண்டு கணாதிபனின் வினாவிற்கு அம்பிகை விடையிறுத்தாள்.

"முப்புரங்களை அழிக்கவென்று சிவபெருமான் புறப்பட்டபொழுது பிள்ளையாரை வழிபடாமல் இரதத்தில் ஏறிவிட்டார். அதனால் தேர் ஓடமுடியாதபடி தேர்ச்சில்லின் அச்சை உடைத்துவிட்டாராம் கணபதி". கணாதிபன் தான் அறிந்த கதையொன்றைக் கூறினான்.

தலையிலே மூன்று தடவைகள் குட்டியபின் தோப்புக்கரணம் போட்டு ஐங்கரனை வணங்கினான் கணாதிபன்.

"அகத்திய முனிவர் கமண்டலத்திலே காவிரிநதியை அடைத்து வைத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தாராம். காவிரியை வெளியேற்றி பாய்ந்தோடவிட்டு பூமியை வளப்படுத்துவதற்காக கணேஸ்வரன் காக்கை உருவிலே வந்து கமண்டலத்தைத் தட்டிவிட்டாராம். கமண்டலத்திருந்த காவிரி நதி பெருக்கெடுத்தோடியது. அகத்தியமுனிவர் திரும்பிப் பார்த்தபோது காக உரு மாறி சிறுவனாக கணபதி நின்றாராம். கோபத்துடன் சிறுவனை முனிவர் குட்டக் கையோங்கியபோது பிள்ளையாராகக் காட்சி கொடுத்தாராம். அகத்திய முனிவர் தன் தலையிலேயே குட்டிக்கொண்டு வணங்கினாராம். அதன்பின்னர் விநாயகரை வணங்கும்போது குட்டிக்கொண்டு வணங்கும் நடைமுறை ஏற்பட்டதாம்." என அம்மம்மா குட்டிகும்பிடுவதைப்பற்றி ஒரு கதை கூறினார்.

"அகத்திய முனிவர் தோப்புக்கரணம் போட்டாரா?" என்று கேட்டான் கணாதிபன், "அது வேற கதை" என்றார் அம்மம்மா, "அதையும் சொல்லுங்களேன்" எனக் கெஞ்சலாகக் கேட்டாள் அம்பிகை.

பிள்ளையாரின் மாமனான விஷ்ணு மருமகனுடன் விளையாடிக் கொண்டிருந்தார். பிள்ளையார் மாமனாரின் சக்கராயுதத்தை எடுத்து வாய்க்குள் போட்டுவிட்டார். அவரிடமிருந்து சக்கராயுதத்தை விரட்டிப் பெறமுடியாதென்பது விஷ்ணுவுக்குத் தெரியும். விளையாட்டாகத்தான் மீளப்பெறவேண்டும் என்று சிந்தித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு ஓர் உபாயம் செய்தார். வலது கையால் இடது காதையும் இடது கையால் வலது காதையும் பிடித்துக் கொண்டு இருந்து எழும்பி தோப்புக்கரணம் போட்டார். இதைக்கண்டு பிள்ளையார் சிரிக்கவும் வாயுள் இருந்த சக்கரம் விழுந்துவிட்டது. அவரை மகிழவைக்க பக்தர்கள் தோப்புக்கரணம் போட்டு வழிபடத் தொடங்கினர்.

கஜமுகாசுரன் ஆட்சி செய்யும்போது தேவர்கள் தனக்கு முன்னால் ஆயிரத்தெட்டுத் தடவைகள் தோப்புக்கரணம் போடவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தானாம். விநாயகப் பெருமான் அவனை வென்ற பின் அதனால் மகிழ்ச்சியடைந்த தேவர்கள் அவரின் முன்னே தோப்புக்கரணம் போட்டு வணங்கினார்களாம். இதுவும் தோப்புக்கரணம் போடுவது பற்றிய இன்னொரு கதை என அம்மம்மா இரண்டு கதைகள் கூறினார்.

இந்த கஜமுகாசுரன் மூஷிகமாகி கணபதியின் வாகனமாயினான் என்றாள் அம்பிகை. தலையில் குட்டுவதும் காதுகளை இழுப்பதும் குந்தியெழும்புவதும் உடலுக்கு நலம் தருமென விஞ்ஞானபூர்வமாகக் கண்டறிந்திருக்கிறார்களாம் அம்மம்மா.

எங்களுடைய வழிபாட்டு முறைகள் எல்லாமே இப்படி விஞ்ஞானரீதியான வகையில் அமைந்தவைதான் என அம்மம்மா கணாதிபன் கூறியதற்கு அங்கீகாரம் அளித்தார். அம்பிகையின் வினாவிற்கு அம்மம்மா பதிலளித்தார். அத்துடன்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்துநினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

என்று பஞ்சாட்சரத்தின் மகிமையைப் பாடினார்.

பஞ்ச அட்சரம் என்றால் ஐந்தெழுத்து. சிவாயநம, நமசிவாய என்ற ஐந்தெழுத்துக்கள் சக்தி மிகுந்தவை. மகா மந்திரமாகத் திகழ்பவை. "சிவனுக்கு வணக்கம்" என்ற பொருள் கொண்ட இந்த மந்திரம் ஆன்மா மலங்களிலிருந்து விடுபட்டு பதியை அடையும் தத்துவப் பொருளையும் தன்னகத்தே கொண்டது. உமாபதி சிவாச்சாரியார் தமது திருவருட்பயனில் ஐந்தெழுத்தருணிலை என்ற ஒன்பதாம் அதிகாரத்தில் இது பற்றி விபரித்துள்ளார். அவை ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களாகும்.

அம்மம்மா பாடிய சம்பந்தப் பெருமானின் தேவாரத்துடன் தொடங்கும் பதிகமும் திருவைந்தெழுத்தின் மகத்துவத்தை விரிவாகக் கூறுகிறது. எனவே அத்தேவாரத்தைப் பாடி "நெஞ்சமுருக நாள்தொறும் பஞ்சாட்சரத்தை ஓதினால் பல நன்மைகள் கிடைக்கும். ஆனபடியால் திருவைந்தெழுத்தை செபம் செய்துகொண்டும் வீதிவலம் வரலாம்" என்றார் அம்மம்மா.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சோதியுட் புகும்போது பாடிய
காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவார் தமை நன்நெறிக்கு உய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.


எனத் தொடங்கும் பதிகமும் நமச்சிவாய மந்திரத்தின் பெருமைகளைப் பேசுகிறது அம்மம்மா என அம்பிகை கூற, கணாதிபன் "திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லுடன் கட்டிக் கடலினுள் விட்டபோது,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலினிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

எனப்பாடி ஐந்தெழுத்தைத் துணையாகக்கொண்டு கரையேறினார். நாங்களும் பஞ்சாட்சரத்தைத் துணையாகக் கொண்டு வலம்வருவோம்" என்றான். மூவரும் வலம்வர ஆயத்தமாகினார்.

மிகுதி அடுத்த இதழில்...

## சேக்கிழார் சுவாமிகள் குருபூசை
## வைகாசி பூசம் - 30-05-2017



தெய்வச் சேக்கிழார்


**தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த பதம்**
**தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் போற்றி**
**ஒல்லையவர் புராணத்தை உலகறிய விரித்துரைத்த**
**செல்வமலி குன்றத்தூர்ச் சேர்க்கிழாரடி போற்றி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்ரேலியாவில் இயங்கும் அபயகரம் அமைப்பின் வெள்ளிவிழா காட்சிகள் (21-04-2017)

**கடந்த இருபத்தைந்தாண்டுகளாக வருடந்தோறும் சிட்னி மாநகரில் கலை நிகழ்ச்சிகள் நடாத்தி, தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கும், மட்டக்களப்பு இராகிருஷ்ணமிஷன் சிறுவர் இல்லத்துக்கும் நிதியுதவி வழங்கிவரும் இந்நிறுவனத்தின் பணிகள் போற்றுதலுக்குரியது.**















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தொன்மைமிகு அடையாளம் : திருகோணமலை லிங்கபுரம் திருமங்களாய் சிவன் ஆலயம்

சேருவிலைச் சேர்ந்த ஒருவரால் அழிவடைந்த புராதன இந்து ஆலயம் ஒன்றின் புகைப்படமொன்று, யாழ். பிராந்திய தொல்லியற் திணைக்கள அதிகாரி திரு. மணிமாறன் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அப்புகைப்படத்தை அவதானித்த பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் (தொல்லியல் இணைப்பாளர் – யாழ்ப்பாணம் மற்றும் தலைவர், வரலாற்றுத்துறை – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களால் ஆலயத்தின் வடிவமைப்பு, அதன் கலைமரபு ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அவ்வாலயம் பொலநறுவை இரண்டாம் சிவதேவாலயத்தை அவருக்கு நினைவுபடுத்தியதால், அவ்வாலயத்தைப் நேரில் சென்று பார்க்க அவர் முடிவு செய்தார். அதன் பலனாகக் கடந்த மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் சிறப்புப் பிரிவு மாணவர்களுடன், பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள், திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கிளிவெட்டியில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லிங்கபுரம் – திருமங்களாய் காட்டுப் பகுதிக்கு கள ஆய்வுகளுக்காகச் சென்றிருந்தார். அக்கள ஆய்வுகளின்போது பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களால், திருமங்களாய் காட்டுப் பகுதியில் அழிவடைந்த நிலையில் உள்ள சிவன் ஆலயத்தில் இருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து கல்வெட்டுக்களில் மூன்று கல்வெட்டுக்கள் கி.பி. 10 ஆம் – 11 ஆம் நூற்றாண்டையும், ஏனைய இரண்டு கல்வெட்டுக்கள் கி.பி 14 ஆம் – 15 ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிட முடிந்ததாக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். குறித்த காலக் கணிப்பை இந்தியாவின் தலை சிறந்த கல்வெட்டு அறிஞர் பேராசிரியர் வை.சுப்பறாயலு, பேராசிரியர் இராஜவேலு மற்றும் கலாநிதி இரகுபதி ஆகியோரும் உறுதிப்படுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

குறித்த விடயங்கள் சக்தி வானொலி – தொலைக்காட்சி மற்றும் சக்தி செய்திகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் கடந்த வாரம் இந்தியாவில் இருந்து இலங்கை வந்திருந்த கல்வெட்டு அறிஞர்கள் மற்றும் பேராசிரியர்களால் குறித்த கல்வெட்டுக்கள் வாசிக்கப்பட்டு, அவர்கள் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையும் சக்தி பண்பலை ஊடாக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குறித்த அழிவடைந்த புராதன சிவன் ஆலயம் அமைந்திருந்த இடத்திற்கு பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் மற்றும் தொல்லியல் மாணவர்கள் ஆகியோரை அழைத்துச் சென்று, நிகழ்ச்சியொன்றை ஒலிப்பதிவு செய்வதற்கு சக்தி வானொலியின் "வணக்கம் தாயகம்" நிகழ்ச்சி பெருவிருப்பம் கொண்டது. இவ்விடயம் தொடர்பாக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்அவர்களுடன் நாம் தொடர்பு கொண்டதுடன், அவர் எமது விண்ணப்பத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

குறித்த பிரதேசம் செறிவான தமிழ்க் குடியிருப்புக்களைக் கொண்ட பிரதேசமாக விளங்கியதுடன், அவ்விடம் முன்னர் திருமங்களாய் என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் இருந்து 1964 இன் பின்னர் மக்கள் படிப்படியாக வேறு இடங்களுக்கு சென்று குடியேறியதால், ஏறத்தாழ ஏழு மைல் சுற்று வட்டம் தற்போது பெருங்காடாகவே காணப்படுகிறது. அதிலும் 1985 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமிழர்களின் புராதன வாழ்விடமாக இருந்த திருமங்களாய் கிராமத்துடனான தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டு, அக்கிராமம் காடுகளால் சூழப்பட்டது.

மாலை மூன்று மணிக்குப் பின்னர் இப்பிரதேசத்தில் யானைகளின் நடமாட்டம் மிகவும் அதிகமாக இருக்கும். இவ்வாறானதொரு பின்னணியில் சக்தியின் வணக்கம் தாயகம் குழுவினருடன் எமது பயணம் ஆரம்பமானது. திருகோணமலை – லிங்கபுரம் பகுதியில் இருந்து வாகனத்தில் பயணித்த எமக்குக் கிட்டத்தட்ட 4 – 5 கிலோ மீற்றர் தூரம், அதாவது காட்டுப் பிரதேசம் ஆரம்பமாகும் வரை மாத்திரமே வாகனத்தில் பயணிக்க முடிந்தது.

நெருக்கமாக இருந்த குடியிருப்புகள் குறைவடைந்து, காட்டுப் பிரதேசம் ஆரம்பமானது. சன நடமாட்டம் அற்ற காட்டுப் பகுதியின் ஆரம்பமும், ஊருக்குள் அத்துமீறும் யானைகளுக்காகப் போடப்பட்ட மின்சார வேலியும் எமது கண்களுக்கு சற்று பயத்தைக் கொடுத்தது. எமக்கு முன்பாகவே பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் மற்றும் தொல்லியல்துறை மாணவர்கள் அங்கு சென்றிருந்தனர். எமக்கு வழிகாட்டுவதற்காக வந்த ஊரவருடன், பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் மற்றும் அவரது குழுவினரை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் வரும்வரை நாம் கொஞ்சம் பயத்தோடும் படபடப்போடும் காத்திருந்தோம்.

உழவு இயந்திரத்ததைச் செலுத்தி வந்த ஊரவரான இளைஞனுடன், நான்கு வாண்டுகளும் முன்புறம் அமர்ந்திருந்ததைப் பார்த்த எமக்கு சற்று பயம் விலகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்ந்த காட்டுக்குள் ஊரவர்களால் பெக்கோ இயந்திரம் கொண்டு உரு பாதையில் கிட்டத்தட்ட 50 நிமிடங்கள் பயணித்தோம். அக்காட்டுக்குள் ய. மிகவும் சர்வதாரணமாக வந்து செல்வதற்கான அடையாளங்கள் எமது கண்களுக. தப்பவில்லை. மிகவும் கடினமான காட்டுப் பாதையில், மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பயணப்பட்ட எமக்கு கண்களுக்கு சிதைவடைந்த கோயில் அமைந்திருந்த பகுதி தென்பட்டது.

இங்கு அடிக்கடி வந்து செல்லும் ஊரவர்களால் கோயிலுக்கு முன்புறமாக இருந்த கிணறு சுத்தப்படுத்தி, இறைக்கப்பட்டிருந்ததுடன், தொல்லியல் மாணவர்களில் சிலர் தாம் கொண்டு வந்த சமையல் பொருட்களைக் கொண்டு மதிய உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ஏனைய தொல்லியல்துறை மாணவர்கள் மற்றும் கிராமத்தவர்கள் ஆகியோர் இணைந்து கோயிலை சுத்தப்படுத்தி, சிவனுக்கு பூசை செய்திருந்தார்கள்.

கோயிலுக்குச் சென்ற வணக்கம் தாயகம் குழுவினரான கணா மற்றும் பிருந்தகனையும் என்னையும் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், தொல்லியற் திணைக்கள அதிகாரிகளான திரு.மணிமாறான், திரு.கபிலன் ஆகியோர், தொல்லியல்துறை மாணவர்கள் மற்றும் கிராமத்தவர்கள் மிகவும் அன்போடு வரவேற்று, ஆலயம் தொடர்பான பல புராதன வரலாற்று விடயங்களைத் தெளிவுபடுத்தினார்கள்.

நட்டநடுக் காட்டில், சோலைகளுக்கு மத்தியில் அமைந்திருந்த அழிவடைந்த புராதன இந்து ஆலயத்தைப் பார்த்தபோது, நாம் எம்மை மறந்தோம். பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் மற்றும் அவரது குழுவினர் அன்றைய தினம் அவ்விடத்தில் மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டதுடன், குறித்த கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. குறித்த மிகப் பழமை வாய்ந்த இந்து ஆலயம் அழிவடைந்து, அவற்றின் பெரும்பாகங்கள் மண்ணுக்குள் புதைந்தும், மறைந்தும் இருந்ததை எம்மால் காண முடிந்தது.

கருங்கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்டுள்ள இவ்வாலயம் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முன்மண்டபம், கொடிக்கம்பம், துணைக்கோவில்கள், சுற்றுமதில் என்பன கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்பதை ஆலயத்தின் நாலா புறத்திலும் உள்ள அழிவடைந்த அத்திவாரங்கள், கருங்கற்தூண்கள், செங்கற்கள் என்பன உறுதி செய்கின்றன. கர்ப்பகிருகமும், அதன் மேலமைந்த விமானமும் முற்றாகச் சிதைவடைந்துள்ளதுடன், தற்போது அவ்விடத்தில் சிறு மேடு காணப்படுகிறது. கர்ப்பக்கிருகத்துடன் இணைந்திருந்த கோமுகியைத் தவிர அங்கிருந்த பீடங்களோ, தெய்வச்சிலைகளோ, செப்புத்திருமேனிகளோ அல்லது சிற்பங்களையோ இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் அமைப்பு, கலைமரபு, தூண்களின் வடிவமைப்பு பொலநறுவை சிவதேவாலயத்தை நினைவுபடுத்தினாலும் தோற்றத்தில் இவ்வாலயம் மிகப் பெரியதென்பதை நிச்சயப்படுத்த முடிவதாக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் குறிப்பிட்டார்.

மேலும் 35 மீற்றர் நீளத்துடனும், 23 மீற்றர் அகலத்துடனும், இருபுறமும் 90 சென்ரிமீற்றர் அகலமான செங்கற் சுவரைக் கொண்டும் குறித்த ஆலயம் அமைந்திருந்திருக்க வேண்டும். கர்ப்பக்கிரகமானது தலா 2 மீற்றர் நீள அகலத்துடன் அமைந்திருந்ததுடன், கர்ப்பக்கிரகத்திற்குப் பின்புறமாக இன்னுமொரு ஆலயத்திற்கு உரிய கட்டட எச்சங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவை தொடர்பாக தற்போது எதனையும் முழுமையாகக் குறிப்பிட முடியாது எனவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

மேலும் இரண்டு வகையான செங்கற்கள் கொண்டு ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 22 சென்ரிமீற்றர் நீளமும் 13 சென்ரிமீற்றர் அகலமும் 4.5 சென்ரிமீற்றர் தடிப்பும் கொண்டமைந்த ஒருவகையான செங்கற்களும், 30 சென்ரிமீற்றர் நீளமும் 20 சென்ரிமீற்றர் அகலமும் 4 சென்ரிமீற்றர் தடிப்புப் கொண்ட செங்கற்களுமே அவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ்வாலயத்திற்கு உரிய தீர்த்தக் கிணறு 3.5 மீற்றர் விட்டத்துடன் சதுர வடிவில், கீழ்ப்பகுதி அழிவடைந்த நிலையிலும் மேற்பகுதி அழிவடையாத நிலையிலும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு வகையான செங்கற்களைக் கொண்டு, பாரம்பரிய கட்டடக்கலைகளில் உறுதியைப் பேணுவதற்காக கட்டப்படும் கொழுவல் கட்டடக்கலை முறையில் குறித்த தீர்த்தக் கிணறு கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாலயத்திற்கு உரிய கருங்கற்தூண்கள் ஓடுகள் மற்றும் செங்கட்டிகள் ஆகியன ஆலயச் சுற்றாடலில் ஆங்காங்கே சிதறிக் காணப்படுவதுடன், பல கருங்கற்தூண்கள் மண்ணுள் புதையுண்டு காணப்படுகின்றன. அவற்றுள் இருந்து இதுவரை ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இவ்விடங்களில் இருந்து மேலும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்க வாய்ப்புக்கள் உள்ளதாக பேராசிரியர் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

கிராமத்து இளையோர்களிடம் இப்புராதன ஆலயம் தொடர்பில் ஏற்பட்டுள்ள ஆர்வம் காரணமாக, அவர்கள் முன்னின்று பல வேலைகளை முன்னெடுத்து வருவது பாராட்டுக்கு உரியது. காரணம் என்னவெனில், எமது இனத்தின் வரலாற்றையும், தொன்மையையும் பேணிப் பாதுகாப்பதற்கு குறித்த கிராமத்து இளையோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அப்பிரதேசத்தில் உள்ள கல்வெட்டுக்கள் தமிழர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு, தமிழர் மதம் பற்றிய ஆய்வில் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்களாக விளங்கும் என்பது உறுதியாகும்.

குறித்த கல்வெட்டுக்கள் முழுமையாக வாசித்து முடிக்கும் கட்டத்தில் இங்குள்ள ஆலயம் முதல் மூன்று கல்வெட்டுக்களின் காலத்தில் இலங்கையில் ஆட்சியிலிருந்த சோழ ஆட்சியாளர்களால் கட்டப்பட்டதா? அல்லது அவர்கள் ஆட்சிக்கு முன்பின்னாக அல்லது சோழர் ஆட்சியில் இங்கிருந்த தமிழர்களால் கட்டப்பட்டதா? என்ற உண்மை தெரிய வரும். இருப்பினும் இக்கல்வெட்டுக்களின் சில பாகங்கள் சிதைவடைந்து இருப்பதால் இவற்றை வாசித்து முடிக்க கால அவகாசமும், புலமையாளர்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

இருப்பினும் வேறுபட்ட காலங்களில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டுக்களில் இருந்து இவ்வாலயத்திற்கு நீண்ட வரலாறு இருப்பது தெரிகிறது. இதற்கு திருகோணமலையில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள் பற்றி கூறும் தலபுராணங்களில் ஒன்றான திருகரைசை புராணத்திலும் இவ்வாலயம் பற்றிக் கூறியிருப்பது இதன் பழமைக்கு மேலும் சான்றாகும்.

இவ்வாலயம் அமைந்திருக்கும் திருமங்களாய் பிரதேசத்தில் பண்டு தொட்டு வாழ்ந்த பரம்பரையின் தற்கால வழித்தோன்றல்களான திரு. வி.முத்துலிங்கம் (தலைவர்), திரு.கே.குரேந்திரராசா (செயலாளர்), திரு. கே. மாணிக்கராசா (பொருளாளர்) ஆகியோர் இணைந்து திருமங்களாய் திருக்கரையைப்பதி சிவன் பரிபாலன சபையை ஏற்படுத்தி அதனுடாக சமகால சமாதான சூழ்நிலையில் இவ்வாலயத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கு அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களின் முயற்சி வெற்றியடைய இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், மத்திய கலாசாரநிதியமும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என நம்புகிறோம் என பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் குறிப்பிட்டார்.

மேலும் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள மரபுரிமைச் சின்னங்கள் மீதும், இப்புராதன ஆலயம் தொடர்பாகவும் ஆர்வமும் விழிப்புணர்வும் பொது மக்களிடமும், திணைக்கள அதிகாரிகளிடமும், சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரிடம் சென்று சேர வேண்டும். அப்பணியை செவ்வனே செய்து முடிக்கும் பொருட்டு கரம் கோர்த்துள்ள சக்தி வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடாக, தொல்லியல் மாணவர்கள் பெரும் உத்வேகத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆலயம் தொடர்பான முழுமையான தோற்றப்பாட்டை, அழிபாட்டு நிலையை, கலை மரபுகளை, கோயில் தோற்றம் பெற்ற காலத்தை அடையாளப்படுத்தக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்வெட்டுக்களை சக்தி குழுவினர் நேரில் வந்து, பார்வையிட்டு, ஆவணப்படுத்தி, அவற்றை மக்களுக்கு கொண்டு செல்கின்றபோது, இவ்விடயம் தொடர்பில் மக்களிடையே மிகப் பெரிய விழிப்புணர்வும் ஆர்வமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆகவே சக்திக்கு எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும் என பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் மேலும் குறிப்பிட்டார்.

மிகுந்த களைப்புடன் இருந்த எமக்கு தொல்லியல் மாணவர்கள் அன்புடன் கொடுத்த மதிய உணவுடன், கொழும்பு நோக்கிய பயணத்தை நாம் ஆரம்பித்தோம்.

தகவல் : அபர்ணாசுதன்
உமாச்சந்திரா பிரகாஷ்
www.shakthifm.com












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மைக்கும் சைவசித்தாந்தம் இம்மைக்கும் சைவசித்தாந்தம்

பண்டிதமணி மு. கந்தையா அவர்கள்

சிறு குழந்தை ஒன்று தனக்குப் பசிக்கிறது என்னும். தனக்குத் தாகமாயிருக்கிறது என்னும். ஏன் பசிக்கிறது? ஏன் தாகமாயிருக்கிறது? என்று கேட்டால் அது பதில் சொல்ல அறியாது.

நாம் உடம்பிலுள்ள அவயவங்களினால் ஓயாமற் தொழில் செய்து கொண்டிருக்கிறோம். கை, கால் முதலிய அவயவங்களினால் நாம் அறியக்கூடியதாகத் தொழில் நடக்கிறது. அதே போல நாம் காணாமல் நம்முள் இருக்கும் அவயவங்களும் பல. அவை ஓயாமல் தொழில் செய்கின்றன. இதனால், அவற்றின் சக்தி தேய்கிறது. அதனை ஈடு செய்தற்காக உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன. பசியெடுத்தல் மூலமாக அத்தேவை உணரப்படுகிறது. இப்படி உள்ளுறுப்புக்கள் இயங்குவதனால் உடலில் உஷ்ணம் உண்டாகிறது. அதைச் சாந்தி செய்ய நீர் தேவையாகிறது. தாகத்தின் மூலம் அத்தேவை உணரப்படுகின்றது, என்று பராயமுள்ளவர்கள் சொல்வார்கள்.

உள்ளுறுப்புக்கள் இயங்குவதை நீர் கண்டீரா? சக்தித் தேய்வை நீக்க உணவு உதவுவதைக் கண்டீரா? என்றால் சாமானியமான பராயம் உள்ளவரும் சொல்லமுடியாது. அதேபோல், நாம் உண்டதற்கும், பருகியதற்கும் என்ன நடக்கிறது என்பதும் பொதுவாக நாம் அறியோம். உண்ட உணவு சீரணிக்கும் விதமும் அதன் சத்துக்கள் திரட்டிப் பிரிக்கப்படும் விதமும் சத்தாகிய அன்னரசம் வெவ்வேறு நிலைகளில் உடலில் வெவ்வேறு உறுப்புக்களுக்குச் செலுத்தப்படும் விதமும், கழிவுப் பொருந்கள் அதற்குரிய கருவிகள் மூலம் பிரிக்கப்பட்டுப் பிரத்தியேகமாகத் தங்க வைத்து வெளியேற்றப்படும் வித்மும் நாமறியோம். இத்தொழில்களிற் சம்பந்தப்படும் பல்வேறு கருவிகளின் இயல்பும் நாம் அறியோம். உணவின் ஒரு பகுதி இரத்தமாக, ஒரு பகுதி எலும்புக்கு உதவ, ஒரு பகுதி சக்கையாய் இருப்பதும் அதன் ஒரு பகுதி இரத்தத்திற்கு உதவ, ஒரு பகுதி பிராணனுக்கு உதவ, ஒரு பகுதி கழி நீராவதும் நாம் அறியோம். அசுத்த இரத்தம் நுழையீரலுக்குச் சென்று சுத்திகரிக்கப்படும் விதத்தையும், நாம் மூக்குத் தொளையால் உள் இழுக்கும் காற்று எங்கே போய்த் தங்குகிறது? என்னென்னத்துக்கு உதவுகிறது? எப்படி வெளியேறுகிறது? என்பதொன்றும் நாம் அறியோம்.

ஆனால் உடற்கூற்று விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி உண்மையால் இவற்றைச் சொல்கிறார்கள். நாங்கள் அறிகின்றோம்; ஒத்துக் கொள்கின்றோம். இனி,

உடம்பில் சதா இயங்கிக் கொண்டிருக்கிறது – உயிர் என ஒன்று. அதன் சொரூபம் என்ன? அது பொருளோ பொருளல்லவோ? பொருளாயின் வடிவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளோ? வடிவமில் பொருளோ? அப்பொருள் உடலில் எப்படித் தங்குகிறது? உடலில் அது ஒரே நிலையாயத் தங்கியிருக்கிறதோ? இடத்துக்கிடம் போக்குவரவு புரிகிறதோ? எந்த நேரமும் அதன் பிரகாசம் ஒரே தன்மையாகத்தான் உள்ளதோ? சில தருணங்களில் அது உடலில் இருக்கிறதோ இல்லையோ என்ற சந்தேகமும் ஏற்படும்படி ஆகிறதே? சற்று நேரத்தில் மீளவும் எங்கிருந்தோ வந்தது போல் வந்து விடுகிறதே இந்தப் போக்குவரத்து நிலை. எப்படியெப்படி என்னென்னத்தைப் பற்றி நிகழ்கிறது?

உடலில் இயங்கும் உயிர் ஒரு கால் சந்தோஷமாயிருக்கிறது. ஒரு கால் துக்கமாயிருக்கிறது. ஒருகால் கோபவசப்படுகிறது. ஒரு கால் காம வசப்படுகிறது, ஒரு கால் பரபரப்படைகிறது. ஒரு கால் சாந்தமாயிருக்கிறது. இவையெல்லாம் நிகழ்வது எதனால்? இப்படியான விசாரணைகளுக்கு உடல்கூற்று விஞ்ஞானிகளும் பதில் கூறார். இனி,

மனம் என்றும், புத்தி என்றும், சித்தம் என்றும் உள்ள உருவமற்ற உட்கருவிகள் இருதயம் மூளை என்பவற்றைப்பற்றி இயங்குவதாக அறிகிறோம். இவை எப்படி இயங்குகின்றன. என்றாவது, இவற்றின் சொரூப நிலை யாது என்றாவது நாம் அறியோம். மனோ தத்துவ நிபுணர்கள் இவற்றின் தொழிற்பாடுகளை ஒருவாறு சொல்கிறார்கள். ஆனால், இவற்றின் சொரூபங்களைப் பற்றியாவது இவை எப்படித் தோன்றுவன எப்படி ஒடுங்குவன என்றாவது, இவை சித்துக்களோ, சடங்களோ என்றாவது, இவற்றுக்கு மூலம் எது என்றாவது, ஆதாரம் எது என்றாவது, அவர்கள் தெளிவுபடச் சொல்லக்கூடிய நிலை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும்,

பஞ்சபூதங்களையும், அவற்றின் நுண்ணியற் கூறுகளையும் விஞ்ஞானிகள் விரிவுபட ஆராய்கிறார்கள். அவற்றின் முடிவாய சித்தாந்தங்களையும் அவ்வப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளியுலகப் படைப்புகளில் அவை சம்பந்தப்பட்டிருக்குமாற்றையும், அச்சூழ்நிலையை மனத் தேவைக்குப் பயன்படுத்துமாற்றையும் நுட்பமாக ஆராய்கிறார்கள். அத்தகைய ஆய்வின் மூலம் ஒலி, ஒளி என்பவற்றின் தோற்ற நிலைகளை அறிந்து ஒன்றை மற்றொன்றாக மாற்றி விந்தையான சாதனைகளையும் விளைக்கிறார்கள். ஆனால், இப்பஞ்சபூத நுண்கூறுகள் எங்கள் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றில் சம்பந்தப்படுமாற்றையும் அவைகளே அகப்பூதங்களாயும், புறப்பூதங்களாயும் நின்று நமக்கு அறிவு நிகழ உதவும் தன்மையையும், நம்மிடத்தில் எழுத்தொலி தோன்றி விருத்தியடைந்து பேச்சாய் மலரும் நுட்பத்தையும் இவை சார்ந்த மற்றும் விசயங்களையும் அவர்கள் கூறுகிறார்கள் இல்லை.

எம் தோலில் பரிசம் என்ற ஒரு நுண் கூறு இருப்பதோ, செவியில் சப்தம் என்ற நுண்கூறு இருப்பதோ மூக்கில் கிராணம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ நாவில் இரசம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ கண்ணில் ரூபம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ விஞ்ஞான அறிவின் தரிசனத்திற்கு அப்பாலாய் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வெளியுலகமாகிய பிரபஞ்சவிரிவில் உள்ள அண்டங்கள், புவனங்கள் கோளங்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள் போன்றவை பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு விரிந்துகொண்டிருக்கிறது. அறிவு விரிய விரிய அவற்றின் தன்மைகளும் விரிந்து விரிந்து காணப்படுவனவேயன்றி அறிவாராய்ச்சிக்கு அடங்கியமைந்து வந்தபாடில்லையென்றே சொல்கிறார்கள். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்ற வள்ளுவர் வாக்கும் இதுவம் சமமாகத் தோன்றுகின்றன.

நாம் உன்னிப்பாகச் சிந்திக்கவேண்டியன இவைபோற் பல்லாயிரம் விசயங்கள் நம் அகத்தும் புறத்தும் உள. இவையெல்லாம் நமக்கு ஒரே உண்மையைத்தான் எடுத்துரைக்கின்றன. அதாவது சொல்லாமற் சொல்கின்றன.

இங்ஙனம் மனித ஆற்றலுக்கும் மனிதருக்கு இருக்கும் அறி கருவிகளுக்கும் ஆராய்ச்சிச் சாதனங்களுக்கும் எட்டாத உண்மைகள் எவ்வளவு எட்டியெட்டிப் பார்த்தாலும் எட்டும் எல்லைக்கு அப்பால் எட்டஎட்ட நிற்கும் எத்தனையோ உண்மைகள், எவ்வளவோ கனகாத்திரமான உண்மைகளாக இருக்கின்றன என்பதையே இவை காட்டுகின்றன.

ஆனால், அவையெல்லாம் எல்லாவற்றாலும் அறியப்பட்டாதவையல்ல. அவற்றையெல்லாம் அறியும் வகையில் ஒன்று இருக்கின்றது என்ற தென்பு எங்கள் முன்னோர் வாயிலாக எங்களுக்குண்டு. எம்முன்னோர்களாகிய மகா ஞானிகள் அவற்றையறிந்து சொல்லியிருக்கிறார்கள். பிறர் அறியும் வகையையும் உணர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் கொள்கைப்படி உயிர்க்கு நிகழும் அறிவு – தூல அறிவு, சூக்கும அறிவு என இரு திறமாயிருப்பதாக அறியப்படுகிறது.

உடலும் உடலிலுள்ள அறிதற் கருவிகளும் சார்பாக அறியும் அறிவு தூல அறிவு. இவற்றின் தொடர்பினை நீக்கித் திருவருளால் அறியும் அறிவு சூக்கும அறிவு. மேற்குறித்தவாறான உண்மைகள் எல்லாம் சூக்கும அறிவுக்கே புலனாகும்; தூல அறிவுக்கு அவை எட்டமாட்டாதென்பது அவர்கள் கொள்கை. இச்சூக்கும அறிவு திருவருட் சார்பாக நின்று அவையெல்லாவற்றையும் அறிதல் மாத்திரத்தில் அமைந்துவிடாது. அவையெல்லாவற்றிற்கும் ஆதாரபூதமாயிருக்கும் இறைவனையும் அறியும். அறிதல் மட்டில்லாது அதனுடன் இரண்டறக்கலந்து நிற்கும் அத்துவித அனுபவமான சிவானந்தத்தையும் பெறும் என்கிறார்கள். அவ்வகைத் தகுதி பெற்ற மகான்கள் பலர் சரித்திரமறிய உலகில் வாழ்ந்திருக்கிறார்கள். நாமறியச் சமீபகாலத்தில் நம்முன் வாழ்ந்தும் இருக்கிறார்கள்.

இத்தகைய சூக்கும அறிவு நுண்ணுணர்வு என்றும் பெயர் பெறும். இந்த நுண்ணறிவினால் பெறும் ஞானம் தத்துவஞானம். அந்த ஞானத்தை உணர்த்தும் நூல்கள் ஞானசாஸ்திரங்கள். அந்நூல்கள் அத்தகைய மகாஞானிகளின் படைப்புக்கள். அவர்கள் தம் சூக்கும உணர்வினால் கண்டகண்ட உண்மைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நூட் பொருளாய் இருக்கின்றன. அதனால் அந்நூல்கள் கற்பார்க்குச் சூக்கும உணர்வைத் தூண்டும் கருவிகளாய் இருத்தல் ஒருதலை.

உலகின் எல்லா நாடுகளிலும், எல்லாச் சமயத்தாரிடையிலும் தத்துவ நூல்கள் உள்ளன. ஒவ்வோர் வகையில், ஒவ்வோர் அளவில், சூக்கும உணர்வைத் தூண்டும் இயல்வு ஒவ்வோர் தத்துவஞான நூலுக்கும் ஒவ்வோர் அளவு உண்டு. ஆனால், அவற்றுட்பல, தத்துவ உண்மைகளை முற்றமுடியக் கண்டுகொள்ளாதனவாய் இருக்கின்றன. கண்ட தத்துவங்களைத் தானும் அறிவுரை அனுபவங்களுக்குப் பொருத்தமான முறையில் அமைத்து விளக்கமுடியாமல் இருக்கின்றன. சமய தத்துவ ஞான நூல்களுள் இந்திய தத்துவ ஞான நூல்களுக்கு முதலிடமுண்டு. அவற்றுள்ளும் சைவசித்தாந்தம் ஒன்று தவிர ஏனையவை, தத்துவஞான உண்மைகளை செம்பாகமாக எடுத்துவிளக்கவில்லை. இப்படியிருக்கின்றது இன்றைய உயர்மட்ட அறிவு ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம். அவற்றுட் சிலவற்றைக் கவனித்தல் பலமாகும்.

Theunique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no more metaphysical speculation but is a purely logical account on scientific principles.

heos Bernad.

அறிவியல் வரலாற்றில் சைவசிந்தாந்தத்துக்குத் தனியான ஒரு இடமுண்டு. பிரபஞ்சத்தின் செவ்விய அமைப்பிற்கும் அதன் சீரிய இயக்கத்திற்கும் உடல்நிலை ஆதாரமாய் உள்ள சகல சாதனங்களையும் அது உண்மையாக ஆராய்ந்து அவையனைத்தையும் 36 தத்துவங்களாக ஒழுங்குபடுத்தி விளக்கியுள்ளமை அதன் தனித்துவ பண்பாகும். இத்தத்துவக் கோப்பு வெறும் தத்துவ வாய்ப்பாடு அளவிலில் இல்லாமல் விஞ்ஞான அறிவியல் விளக்கத்திற்கும் தர்க்கரீதியான ஆய்வியல் விளக்கத்திற்கும் ஏற்றதாய் இருத்தல் குறிப்பிடற்பாலதாகும் என்கிறார் தியோஸ் பெர்னாட் என்ற அறிஞர்.

The fact must be born in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta where as in Sanskrit not even a single systematic work on the philosophy is to be met with, even though its principal tenets are found scattered with much that is rubbish in the Sankya, the Yoga, The Nyaya, The Vaisesika and The Vedantha works.

- Maraimalai adigal.

தமிழ் மொழியில் மட்டுமே ஒழுங்குமுறையானதும் பிரமாணிக்கமுள்ளதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த நூல்கள் உள்ளன. சமஸ்கிருதத்தில் சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், வேதாந்தம் என்ற பல்வேறு பெயர்களில் பல்வேறு தத்துவ நூல்கள் இருந்தும் அவற்றுள் ஒன்றேனும் சைவசித்தாந்தத்தைப் போல் ஒழுங்குமுறையான தத்துவ நூலாக அமையவில்லை. அவையெல்லாம் உதவாக்கரை நூல்கள் என்கிறார் மறமலையடிகள்.

The Saiva Siddhanta philophy is the choicest product of the Dravidian intelect. It is the most elaborte influential and undoubtedly the most intrinsically Valuable of all the religions of India. It is peculiarly The South Indian and Tamil Religion,

-Dr. G. U. Pope.

சைவசித்தாந்தம் திராவிட அறிவியல் நுட்பத்தின், உயர்தர படைப்பாக உள்ளது. இது மிக மிக விரிவானதும் நிரம்பிய செல்வாக்குள்ளதும், முடிநிலை உண்மையோடு மிக அந்தரங்கமாக அணுகி நிற்கும் அகமுகத் தொடர்ச்சி வாய்ந்ததுமாகும். இந்திய தத்துவ ஞானங்கள் எல்லாவற்றுள்ளும் இது ஒன்றே இத்தன்மையுள்ளதாய் இருக்கின்றது. சிறப்பாக இது தென்னிந்திய தமிழ்த் தத்துவஞான நூல் என்று போற்றத்தகும் என்கிறார் பு.ஜ. போப் என்னும் அறிஞர்.

இத்தகைய மெய்யறிஞர் கூறும் நல்லபிப்பிராயங்கள் சைவசிந்தாந்தக் கல்விக்கும் நமக்குமுள்ள இயற்கையான தொடர்பைச் சுட்டிக்காட்டுகின்றன. இது தமிழினத்தாரின் முதசொம் என்பதை நினைவூட்டுகின்றன. தமிழராகிய நமக்கு அதன் பேரில் இருக்கக்கூடிய உரிமையையும் கடமையையும் எடுத்துணர்த்துகின்றன.

தமிழரின் சமய தத்துவஞானம் மட்டுமல்ல, அவர்களின் சாமானிய ஒழுக்கலாறும் வழிபாட்டு விதிமுறைகளும், ஏன்? அவர்கள் பாசையும் சைவசித்தாந்த மயம் என்ற கருத்தும் சிறப்பாக மேல்நாட்டு அறிஞர்களால் போற்றப்பட்டிருக்கிறது. தமிழருட் பொதுமக்களின் நடைமுறையிலுள்ள சாதாரண பேச்சுவார்த்தைகளுக்குள்ளேயே சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிரம்ப இருப்பதை அறிஞர் சுளைசுளையாக எடுத்துக் காட்டுவார்கள். அது தனி விசயம். இங்கு விபரித்தற்கிடமில்லை.

இவ்வகையால் சைவசித்தாந்த அறிவு நம்மால் வருந்தியும் தேடற்பாலது. காலநேரமின்மை முதலாய சம்பிரதாயபூர்வமான சாட்டுகளின் தடைகளை மீறி நின்று சம்பாதிக்கப்பாலதுஎன்ற நிலை தெளிவாகிறது. ஆனால், ஆத்மீக லாபத்துக்குத்தானே சைவசித்தாந்தம். அதைப் பின்பு பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற கருத்தும் பரவலாக நம்மத்தியில் இடம்பெற்றிருப்பதும் என்னவோ உண்மைதான். இத்தகைய கருத்துநிலை உண்மை இயல்புக்கு விரோதமானது; துர்அதிஷ்டவசமாக நம்மத்தியில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கவனத்திற்கொள்ளல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கவனித்தற்கு முன்னோடியாகச் சைவ சிந்தாந்தம் நமகென்ன சொல்கிறது என்ற சுருக்கமான விளக்கமொன்று அவசியமாகிறது. அது கூறுவன–

1. உடலுக்கு வேறாக உயிர் என ஒரு பொருள் உண்டு.
2. அந்த உயிருக்கு உள்ளாக இறைவன் என்னும் மற்றொரு பொருள் உண்டு.
3. உயிர்ப்பொருள், உள்ளிருக்கும் இறைவன் உணர்த்துதல் வழியாகத்தான் தனது உடற் கருவிகளை இயக்கிக் கொண்டு இவ்வுலகில் வாழ்கிறது.
4. உயிரின் உலகியல் வாழ்வுக்கு உடந்தையாக ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன.
5. திருவருளால் இவற்றைச் சார்ந்து உயிர்வாழும் கட்டம் அவ்வளவும் பந்தநிலை அல்லது பெத்த நிலை.
6. திருவருளால் இவற்றின் தொடர்பு நீங்கிச் சூக்கும உணர்வாகிய ஞான உணர்வினால் கடவுளை அறிந்து அடைந்து அனுபவிக்கும் நிலை மோட்ச நிலை அல்லது சுத்த நிலை.
7. இச்சுத்த நிலைப்பேறு ஒவ்வொருயிர்க்கும் உரியது. ஆனால், அதனதன் பக்குவ காலத்தில் மட்டும் அதற்கதற்கு வாய்ப்பது.
8. இவ்வகையிற் சம்பந்தப்படும் பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்பன.
9. உண்மை அறிவியற் கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில் இம் முப்பொருள் இயல்புகளை உரிய முறையிற் கற்றுக் கேட்டுத் தெளிபவர்களே மெய்ஞ்ஞானம் பெறுவர். அவர்களே மேல்கதிக்கும் வீடு பேற்றிற்கும் உரியர்.
10. வீடு பேறு என்பது உயிர் தன் சீவத்தன்மை கழிந்து சிவத்தோடு ஏகரசமாய் நின்று அனுபவிக்கும் ஆராத ஒரு பேரின்ப நிலை.

இவையும் இவற்றின் உள் விரிவுகளுமே சைவசிந்தாந்தம் கூறும் விசயங்கள். இவற்றை அறிவதன் மூலம் ஒருவன் தன்னையறிந்தவன் ஆவான். தன்னையறியும் அறிவும் தலைவனாகிய இறைவனை அறிதலோடேயே நிகழும். இந்த அறிவு நிலையே அறிவுக்கெல்லாம் உயர்நிலை அறிவாகும். இந்த அறிவுநிலையை எட்டாவிடில் அறிவுக்குப் பயன் எதுவும் இல்லை. "கற்றதனாலாய பயனென்" என்ற செய்யுளின் மூலம் இக்கருத்து திருக்குறளில் முத்திரிகரணம் (முத்திரையிடல்) செய்யப்பட்டிருக்கிறது.

இத்தகைய அறிவு நிலை அறிந்த அளவிலேயே முத்தியைத் தந்துவிடுவதில்லை. யாம் முன்குறிப்பிட்டவாறு, இந்த அறிவு நிலை ஒருவனிடத்துமோ நிலைக்கின்றியமையாத சூக்கும உணர்வை வளர்க்கும். அதன் பெறுபேறாகப் படிமுறை நிகழும். ஆன்மவிழிப்புப் பெற்ற உயிரை அதன் உட்கலப்பினால் ஒன்றாய் இருக்கும் இறைவனே, பக்குவமறிந்து, குருவாய்த்தோன்றி ஆட்கொண்டு வீட்டின்பம் கொடுப்பன் என்பது முடிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதத்தில் ஒருவர் சைவசிந்தாந்தம் கற்று உண்மையில் முத்திப்பேறு கூடுதற்கிடையில் எத்தனை எத்தனையோ பிறப்புக்கள் எடுக்கவேண்டியிருக்கும். ஆனால் அப்பிறப்புக்கள் ஒவ்வொன்றும் மேல் மேல் திருத்தமுற்ற பிறப்புக்களாகவே அமையும். ஒவ்வோர் பிறப்பிலும் குறித்த சூக்கும உணர்வின் பலாபலனை உயிர்பெற்றுக்கொண்டு இருக்கும்.

எந்தவொரு பொருட்கும் அது சூக்கும நிலையில் உள்ளபோது இருக்கக்கூடிய வீறும் விறலும் அதிசயிக்கத்தக்க அளவுக்காதிகதிகம் என்பார்கள். ஒரு குறிக்கப்பட்ட அளவு தண்ணீர் தான் என்ன சாமர்த்தியம் பண்ணியும் அசைக்கமுடியாத ஒரு இயந்திரத்தை அதேயளவு தண்ணீரின் சூக்கும நிலையாகிய நீராவி இயக்கிவிடுவதைப் பார்க்கிறோம். தூல உணர்விலும் பார்க்க சூக்கும உணர்விட்குளதாகும் ஆற்றலின் அதிகத்தரம் இத்தகையதாய் இருக்கும். ஆகவே சைவசித்தாந்த அறிவுணர்வு பெற்ற ஓருயிரின் மேன்மேற் பிறப்புக்களில் அதன் அறிவாற்றல் செயலாற்றல்களில் விசேடம் காணப்படுதல் இயல்பே. அன்றியும்,

சைவசித்தாந்த அறிவுணர்ச்சியுள்ள ஒருவர் மட்டுமே தன்னுயிரின் அந்தரங்கச் சூழ்நிலைகளை அறிதல் சாலும். முற்றாக அறியாவிட்டாலும் ஓரளவிலாவது சிறப்பாக அறியாவிட்டாலும் ஒரு பொதுஅளவிலாவது தன் சூக்கும அளவின் தரத்திற்கு ஏற்ப அந்த அறிவு அவர்க்கு வாய்த்தல் சாத்தியமே. பந்தநிலை வாழ்வில் அகப்பட்டிருக்கும் தான் அதற்கு உடந்தையாக உள்ள தனது ஆணவ, கன்ம, மாய விவகாரங்களினாலே மயக்கப்படும் தன்மை அவர்க்குப் புலனாகாமற் போகாது. அவற்றின் சார்பினால் காமம், குரோதம், லோபம், மோகம் முதலிய அந்திய இயல்புகளுக்குத் தான் அடிமையாகும் தன்மையையும் அவர்க்குப் புலனாகாமற் போகாது. இத்தகைய தீய இயல்புகளைத் தன்னிடத்திற் காணும் வாய்ப்புள்ளவர் படிப்படியாக அவற்றை விலக்கி ஒழுகத்தலைப்படுதல் தப்பாது. இவ்வகையிலேயே ஒருவருக்கு அகச்சீர்திருத்தம் வாய்ப்பதாகும். தனிப்பட்டவரின் இத்தகைய அகச்சீர்திருத்தமே புறச்சீர்திருத்தத்திற்கும் காரணம். சமூக சீர்திருத்தத்திற்கும் காரணம். தனி வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி அகச்சீர்திருத்தத்தின் பங்கு அசாமானியப் பொறுதி வாய்ந்தது.

மேலும், சைவசிந்தாந்த அறிவுணர்ச்சி இல்லாத ஒருவர் உயிராகிய தன் இயல்பையும், அதன் உள்ளுயிராகிய கடவுள் இயல்பையும் கற்பனை பண்ணக்கூட இயலாதிருக்கும். அந்நிலையில் கடவுள் வழிபாடு அவருக்கு யதார்த்தமாக வாய்த்தல் துர்பலம். வழிபாட்டு நிலையங்களாகிய ஆலயங்களில் நிகழும் கிரியாம்சங்களின் தத்துவ உண்மைகளை விளங்கிக்கொள்ளும் தத்துவம் அவர்க்கு லபித்தலில்லை. அத்தகையோர் அர்ச்சகராயிருக்கும் பட்சத்தில் அங்கு சுவாமி சாந்நித்தியமே சோபித்தல் கஷ்டமாகும்.

இன்னும், நாங்கள் கடவுள் வழிபாட்டிற் பேறடைதற்கெனவே அமைந்தவை நம் திருமுறைகள். அவை சைவசித்தாந்தக் கருவூலங்கள். சைவசித்தாந்த அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கில் விளங்கும் வரைக்கும் அவற்றின் பொருள் வெளியாய் இருக்காது. மறையாகவே இருக்கும். தமிழ்மறை என்றே அவை பெயர் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

தன்னைப்பற்றிய பாசங்களின் தொடர்பு நீங்கிய ஆன்மா சிவரூபத்தின் தொடர்பில் தன்னை அறியும். இது ஆன்மதரிசன நிலை. அந்தகாரமாகிய ஆணவ இருளில் ஒரு விடிவு புலப்படும் நிலை இது. இந்த நிலையின் விருத்திப்பாடாக, ஆன்மா சிவதரிசனத்தின் தொடர்பில் தன்னை நன்றாக விளங்கும். முன்னைய நிலை ஆணவ இருளில் விடிவு புலப்படும் நிலை. ஆனால், இப்பின்னைய நிலை விடிவு ஏற்பட்டேவிடும் நிலையாகிறது. திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் இருக்கின்றன. ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சி முன்னும் திருவெம்பாவை பின்னும் படிக்கப்படுகின்றன. முன்னையது விடிவு புலப்படும் வைகறை வேளையிலும் பின்னையது பொழுது புலரும் உதய வேளையிலும் நிகழ்கின்றன. முற்காட்டிய சித்தாந்த தத்துவ பொருள் விளக்கத்தின் விளக்கிப் பார்க்கும்போது தானே இவற்றை இந்த நேரத்திற் படிப்பதன் அர்த்தம் புலனாகின்றது. அந்நிலையில் மட்டும்தானே புறவழிபாட்டுக்கிரியையாகிய அது நமது அகத்துக்கு ஏற்ற வகையில் கற்பிதமாகின்றது எனவும் தெரியவருகிறது. பாட்டுக்களைக் கேட்டுக் கேட்டுக்கொண்டே அகத்தில் நாம் சிவரூபமும் சிவதரிசனமும் பெறுவதாகப் பாவனை யாவது பண்ணிக்கொள்ளாத பட்சத்தில் திருப்பள்ளியெழுச்சி பூசை, திரு வெம்பாவைப் பூசைகளின் பலனை நாம் பெற்றுக்கொண்டதாகச் சொல்வதற்கில்லை. இன்னும் இப்படிச் சுட்டியுணருமளவிலும் விசயம் முடிந்தபாடில்லை. இந்நிலைமையை உணர்வதற்குரிய முன் பின் விளக்கங்களும் இன்றியமையாதவையாகும். சைவ சித்தாந்தக் கல்வி சாமானியமான ஆலய வழிபாட்டுக்கு எத்துணை அவசியம் என்பதை இந்த வகையிற் சிந்தித்தல் நலமாகும். இனி "திருவேயென் செல்வமே...." என்று தொடங்கி "உருவே என் உறவே என் ஊனே ஊனின் உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற கருவே என் கற்பகவே கண்ணே கண்ணே கருமணியே மணியாடு பாவாய் காவாய்" என்று அப்பர் சுவாமிகள் பாடுகின்றார். இதைப் பொதுநோக்கில் பார்த்தால் ஏதோ பல்வேறு சொற்களானான நெடுந்தொடராய் இருக்கின்றது. சற்று உற்று நோக்கினால் புறத்திலிருந்து அகத்தை நாடி நுணுகி நுணகிச் செல்லும் ஒரு உணர்வொழுங்கி இதில் புலனாகின்றது. நுணகி நுழைந்து செல்லும் உணர்வு சூக்கும உணர்வு. நாம் ஏலவே கவனித்த சூக்கும உணர்வின் தொழிற்பாட்டை இங்கே காண்கின்றோம். ஏதாலும் ஒரு இலக்கைப் பற்றிக்கொண்டு அதிலிருந்து மேலும் மேலும் நுணகி நுழைந்து நுழைந்து தெய்வ அனுபவத்தைப் பற்றும் அப்பர் சுவாமிகளது சூக்கும உணர்வின் தரம் இங்கே அறியப்படுகின்றது. இந்த அறிவே இப்பாட்டின் அனுபவப் பயன், இப்பயனைப் பற்றாதவரே இதைப் படிக்கும் நாம் அடைந்த பேறு எதுவுமில்லையாகும். சித்தாந்த உணர்வு நோக்கு இல்லாமல் இது கைகூடாது.

சித்தாந்தக் கல்வி உணர்வினாலே சூக்கும உணர்வு பெருககிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாற்றல், செயலாற்றல்கள் அதிகரிக்கின்றன. தனிமனித சீர்திருத்தம் ஏற்படுகின்றது. சமூக சீர்திருத்தம் ஏற்படுகிறது, ஆலய வழிபாடு பலன்படுகின்றது, தேவார திருவாசகம் ஆகியவற்றின் அநுபவப் பயன் உணரப்படுகின்றது, என்ற உண்மைகளை இதுவரை கண்டோம். இன்னும் இவ்வகையில் உள்ள கருத்தம்சங்கள் பல அவற்றில் ஒன்றைக் கவனித்து மேற்செல்வோம்.

தன்னுயிரின் பெருமானத்தை மட்டுமல்ல, தன்னுடலின் பெருமானத்தை மட்டிட்டு அறிவதற்கும் சித்தாந்த அறிவு இன்றியமையாதது. உடலின் சிக்கன பரமான அற்புத அமைப்பு நிலையை உணர்ந்து அதைப் படைத்த கடவுளின் அருமை பெருமையை உணர்விற்க நிற்கின்றது இவ்வுடம்பு. இதன் புறத்திலுள்ள அவயவ அமைப்பெல்லாம் இறைபணிக்கும் வழிபாட்டிற்கும் உகந்த வகையிற் காணப்படுகின்றன. இவற்றினும் பார்க்க உள்ளுறுப்புக்களின் அமைப்புமுறை அதிசயகரமானது. இவ்வுடம்பினுள்ளே மேருமலை உண்டு, சிதம்பரம் உண்டு, காசி உண்டு, திருவேணி சங்கமம் உண்டு. வெளியுலகிலுள்ள அவற்றின் பிரதியம்சமாக அவை இருக்கின்றன. முள்ளந்தண்டு மேருமலை, இருதயவெளி சிதம்பரம், புருவநடுவிலுள்ள ஆக்ஞா சக்கரம் காசி. அதனாலே பந்து கூடி ஒன்றையொன்று குறுக்கிடும் இட நாடி, கலா நாடி, பிங்கலா நாடிகளின் சங்கமம் திருவேணி சங்கமம். இப்படிச் சொல்வதெல்லாம் மாதிரிக்காகவோ பாவனைக்காகவோ ஆகியிருக்கலாம் என எண்ணுதலிலும் அர்த்தமில்லை. மகான்கள் வரலாறுகள் இவற்றின் உண்மைத் தன்மைக்கு ஆதாரமாயிருக்கின்றன. சிவயோக சுவாமிகள் ஒருமுறை காசிக்குப் போய் அங்கிருந்து எழுதிய கடிதமொன்றில், "நான் உங்கே கண்டதையே இங்கும் கண்டேன்" என்ற ஒரு வசனம் உண்டு. தமது யோக சாதனையினாலேயே தமது புருவநடுவிற் கண்ட தரிசனம் இங்கே கண்ட காட்சி, திருவேணி சங்கமத்தோடு கூடிய காசி ஷேத்திர தரிசனம் அங்கே கண்ட காட்சி. இது யாரும் மறுக்கவொணாதது.

குறித்த ஆக்ஞை என்பது ஆறாதாரங்களில் ஒன்று. இது போல் மற்றும் ஆதாரங்கள் ஐந்துள. நமது உடலில் "விந்து என்ற சுத்த மாயா தத்துவத்தின் ஒரு அம்சம் மிக அந்தரங்கமாய் இருக்கிறது. அதைப்பற்றிக் கொண்டு குண்டலினி சக்தி என்ற சிவசக்தி சொரூபித்து மேல் மேல் எழும் ஒரு வாய்ப்பும் இருக்கிறது. அவ்வாய்ப்பை அறியக் குருவின் அருள் வேண்டும். குருவருள் பெறுதற்கு இருவினையொப்பு முதலிய உயர் பண்புகள் வேண்டும். அதற்குச் சித்தாந்த ஞான உணர்வு வேண்டும். இவ்வாற்றால் அவ்வாய்ப்பை அறியும் ஒருவர் தமது பிராணாயாமம் புலனடக்கம் முதலிய சாதனைகளால் குண்டலினி சக்தியை உருப்பட்டெளச் செய்யும் போது அது பாம்பு மண்டலம் இட்டெழுவது போல் எழும். "ஆடு பாம்பே ஆடு பாம்பே" என்று பாம்பாட்டிச் சித்தர் ஆட்டிய பர்ம்பு இந்தப் பாம்பே தான். சிவன் கோவில் மூலத்தானத்தில் சிவலிங்கத்தைச் சுற்றிப் படமெடுத்து மேற்கவித்து நிற்கக் காணும் பாம்பு இந்தப் பாம்பேதான். இந்தச் சிவலிங்க அமைப்பு தன்னுடலில் மூலாதாரமென்ற ஆதாரத்தில் சிவயோகி ஒருவர் கண்ட காட்சியின் பிரதி ரூபமே என அறிதற்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குண்டலினி எழுந்து தொழிற்படும்போது அதன் பிரபாவத்தினாலே ஆதாரங்கள் ஒவ்வொன்றும் தொழிற்படும். மிக நுண்ணிய அற்ப நரம்பு முடிப்புக்களாய் இருந்த அந்த ஆதாரங்கள் பிரமாண்டமான தாமரை வடிவங்களாய் விரியும். அவற்றில் உயிருணர்வு பொருந்திப் பொருந்தி நின்று தியானமும் பூசனையும் பண்ணப் பண்ண அங்கங்கு தெய்வ மூர்த்தங்கள் தோன்றித் தோன்றி உயிர்க்கு அருள் சொரியும். இவ்வகையில் மேல் நோக்கிய உயிர் பிரமாந்திரமாகிய உச்சி நடுத்தொளைக்கும் அப்பால் உயிர்த்தெழும்பி அங்கு தரிசனமாகும் பரமசிவப் பொருளோடு ஒன்றுபடும். இத்தகைய ஒன்றுபடுதல் சிவயோகமாகும். சித்தாந்த அறிவுணர்ச்சியும் தொடர்பாக வரும் குருவருளால் கைகூடும். இச்சிவயோகப் பேற்றுக்கு ஆதாரம் இவ்வுடம்பே. உயிரின் ஈடேற்றப் பணியில் உடம்பின் பங்கு எஉவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற விளக்கம் ஏற்படும்போது தானே ஒருவன் தன் உடம்பின் பெறுமானத்தைப் தானறிபவன் ஆகிறான். இப்பேறு, சைவசிந்தாந்தக் கல்விப்பேறு. "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலர் திருமந்திரத்தின் அனுபவப் பயன் இனித்தானே விளங்கும்.

சித்தாந்தம் கற்பதனால் அந்த அறிவுணர்ச்சி பெறுவதனால் அம்மைக்கு மட்டுமல்ல, இம்மைக்கும் பேறுண்டு. மோட்சப் பேறு மட்டுமல்ல, வாழ்க்கைப் பேறுகளும் பல உண்டு.

உலக இன்பங்களைத் துறக்க விரும்புபவர், அத்துறவுக்குக் காலமும் நேரமுஞ் சாட்டி அதனைப் பிற்போடாமல் இயன்ற அளவுக்கு முன்னதாகவே துறக்கவேண்டும் என்கின்றார் திருவள்ளுவர். அதற்குக் காரணமும் அவரே சொல்கின்றார். "துறந்தபின் ஈண்டியகற் பால பல" உலக இன்பங்களைத் துறந்த பின்பும் இறுதிப் பலனாக மோட்சமடைவதன் முன்னுமாக உள்ள இடைப்பட்ட கால எல்லையில் இவ்வுலகிலேயே அத்துறவி அடைதற்குரிய பேறுகள் பலவாகும் என்பது அவர் கூறும் காரணம்.

"வேண்டின் உண்டாகத் துறக்கத் துறந்த பின்
ஈண்டியற் பால பல" – குறள் 342

இங்கு நாம் ஆராயும் கருத்துக்கும் இதற்கும் நிரம்ப ஒற்றுமையுண்டு. துறத்தலுக்கும் மோட்சமடைதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு துறவி பெறத்தகும் பேறுகள் பல என்கிறார் அவர். சைவசித்தாந்தக் கல்வியுணர்வு பெறுதலுக்கும் முத்திப் பேற்றுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒருவர் பெறத்தகும் பேறுகள் பல என்கின்றோம் நாம். அப்பேறுகளை விரும்பினால் ஏற்கெனவே துறவை மேற்கொள்க என்கிறார் அவர். நாமும் அப்பாணியிலேயே ஏற்கெனவே சைவசித்தாந்தத்தை கற்க என்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த அறிவுணர்வு பெற்றவர் சைவசித்தாந்தி என்ற மதிப்புக்குரியவர். சைவசித்தாந்தி மனித சாதியில் தனிச்சாதி. சைவசித்தாந்த தூய்மை ஒரு தனித்தூய்மை. சைவசிந்தாந்த வாய்மை ஒரு தனி வாய்மை. சைவசித்தாந்த ஞானவீறு ஒரு தனி வீறு.

சிவயோகசுவாமிகளிடத்தில் நாம் கண்டு மகிழ்ந்த தூய்மை, சைவசித்தாந்தத் தூய்மையின் முழுமலர்ச்சிப் பொலிவு நிலை. அவரிடம் கண்ட வாய்மை, ஞானவீறுகளும் அத்தகையனவே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் முதலிய மேதாவிகளிடத்தில் இருந்தனவாக நாமறியும் நேர்மை, வாய்மை, அறிவு வீறு எல்லாம் சைவசிந்தாந்த உணர்வின் பிரகாசமாகவே அமைந்தவை. அவர்களின் செயல்களிற் காணும் திட்பநுட்ப இயல்புகளுக்கும் மந்திர சக்தி போன்ற ஆற்றலுக்கும் நாம் வேறு காரணம் எதுவும் காண்டலியலாது.

எவராயினும் சரி, இங்கு வாழும் காலமெல்லாம் பிறருக்குப் பயன்படக்கூடிய உத்தம அறிவாற்றலோடும், செயலாற்றலோடும் வாழவேண்டும். வாழ்க்கையொழிந்தால் மனிதப் பிறப்பின் ஒரே இலட்சியமாகிய முத்திப்பேற்றை அடையவேண்டும். இதுவே உண்மையான வாழ்விலட்சியம். வாழ்க்கை வாழ்வதற்கேயென்று சொல்வார் சொல்லிக்கொள்ளட்டும். அது நமக்கல்ல.

# இதய அஞ்சலி

## சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சமயப் பிரசாரகர்

## நித்தியதசீதரன் அவர்களின் திடீர் மறைவுகுறித்து “அருள் ஒளி” தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஒளி தகவல் களஞ்சியம்

## ✧ அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலய தொண்டர் சபையின் வைரவிழா

1956 முதல் செயற்பட்டுவரும் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலய தொண்டர் சபையின் வைரவிழா 04-06-2017 இரவு 8 மணிக்கு ஆலய முன்றலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வைர விழா சிறப்பு மலரை யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. நாகலிங்கம் வேதநாதன் வெளியிட்டு வைத்தார்.

## ✧ கதிர்காம ஆலயத்தின் தலைமைக்குரு பஸ்நாயக்க நிலமே டி.பி. குமாரகே யாழ். விஜயம்

கதிர்காம முருகன் கோவில் பஸ்நாயக்க நிலமே டி.பி. குமாரகே 04-06-2017 காலை யாழ்ப்பாணம் வருகை தந்தார். நல்லூர் ஆலய அறங்காவலர், நல்லை ஆதீன முதல்வர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் செல்வச் சந்நிதி அறங்காவலர்கள், வட மாகாண முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

## ✧ வற்றாப்பளை கண்ணகை அம்மன் தீர்த்தமெடுத்தல்

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 05-06-2017ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தமெடுக்கும் நிகழ்ச்சி இடம்பெற்று 12-06-2017 அன்று வருடாந்த பொங்கல் இடம்பெறும்.

## ✧ அளவெட்டி பெருமாக்கடவை வருடாந்த திருவிழா 2017

எதிர்வரும் 28-06-2017 ஆனி மாதம் 14ஆம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 08-07- 2017 சனிக்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

## ✧ தெல்லிப்பழை கிழக்கு பெரியகலட்டி ஞானவைரவர் மணவாளக்கோலத் திருவிழா

07-06-2017 காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ **கிளிநொச்சி சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம்**

கிளிநொச்சி சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் 08-06-2017 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. பிரதமகுருவாக சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக் குருக்கள் அவர்கள் பணியாற்றவுள்ளார்.

✧ **நவாலி களையோடை கண்ணகை அம்மன் வைகாசி விசாக விழா**

07-06-2017 புதன்கிழமை விசேட அபிஷேகம் நடைபெற்று, பொங்கல் வீதியுலா நடைபெறும்.

✧ **திருகோணமலை லிங்கபுரம் திருமங்களாய் சிவன் ஆலயம்**

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் (தொல்லியல் இணைப்பாளர், தலைவர், வரலாற்றுத்துறை – யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் தலைமையில் இவ்வாயலம் தொடர்பான புராதன கல்வெட்டுக்கள் கருங்கல் இடிபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

✧ **திருஞானசம்பந்தர் சுவாமிகள் குருபூசை**

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் குருபூசை 10-06-2017 பகல் 11 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான குபேர வாயில் கோபுரத் திருப்பணி**

குபேர வாயில் (வடக்கு) கோபுரத் திருப்பணிக்கான ஆரம்ப வேலைகள் ஆனி உத்தரத்தன்று 30-06-2017 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவுஸ்ரேலியாவில் செஞ்சொற்செல்வர் அவர்கள் கலந்துகொண்ட ஆன்மீக நிகழ்ச்சிகளில் சில காட்சிகள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்

Print Master. T.P. 021-205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org